சனவரி - 2015

திருவள்ளுவர் ஆண்டு 2045

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 59
பகுதி : 03

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம் ★ 14-09-1901 ★ THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்


| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா. குமரன் சேதுபதி M.B.A., | தலைவர் |
| மருத்துவர் ந. சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச. மாரியப்ப முரளி M.A., B.L., | செயலாளர் |
| திருமதி. இராணி ந. இலட்சுமி குமரன் சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு. அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா. சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ. சித்தையா | உறுப்பினர் |
| திரு. பெ. சந்திரசேகரன் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59
பகுதி : 03
சனவரி : 2015

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2045



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

செயலாளர்
**ச. மாரியப்ப முரளி,** எம்.ஏ.,பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,மதுரை.

பதிப்பாசிரியர்
**இரா. சதாசிவம்**
மதுரைத் தமிழ்ச்சங்கம்,மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| திருவள்ளுவமும் மேலாண்மைக் கோட்பாடுகளும் | பேராசிரியர். டாக்டர். கா. அரங்கசாமி | 6 |
| திருக்குறள் உணர்த்தும் பொருளியல் சிந்தனைகள் | முனைவர் மா. ஆ. சுகந்தி | 14 |
| குறுந்தொகை : கடவுள் வாழ்த்து கட்டமைப்பு ஆய்வு | முனைவர் செ. வை. சண்முகம் | 22 |
| உள்ளுறையும் இறைச்சியும் | முனைவர் நா. பாலுசாமி | 32 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

பேராசிரியர் கா. அரங்கசாமி, தாராபுரம், முனைவர் மா.ஆ. சுகந்தி, திருச்செந்தூர், பேராசிரியர் செ. வை. சண்முகம், சிதம்பரம், பேராசிரியர் நா. பாலுசாமி, மதுரை ஆகிய நால்வருடைய கட்டுரை இவ்விதழில் இடம் பெறுகிறது.

பேராசிரியர் கா. அரங்கசாமி, அரசு கலைக் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவர் தமிழ் இலக்கியச் செம்மல்; தமிழ் இலக்கியப் பயிற்சியுடன் ஆங்கிலநூல் பயிற்சியும் உடையவர்; அவர் இன்றைய மேலைநாட்டு அறிஞர்களுடைய மேலாண்மைக் கோட்பாடுகள் திருக்குறளில் பொதிந்து கிடப்பதை மிக நுட்பமாக ஆய்வு செய்திருக்கிறார். திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள செய்திகளைப் புரிந்து கொள்வதற்கு ஆழ்ந்து அகன்ற பிறநூல்களின் பயிற்சியும் இன்றியமையாது தேவைப்படுவதை ஆசிரியருடைய கட்டுரை வலியுறுத்துகிறது. வெளிநாட்டுச் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு பேராசிரியர் திருக்குறளை விளக்கும் திறம் கல்வி இன்பம் தருகின்றது. ஒரு கல்வியாளருக்கு விரிந்து பரந்த நூற்பயிற்சி தேவை என்பதை இக்கட்டுரை தெளிபடுத்துகிறது.

முனைவர் மா.ஆ. சுகந்தி திருக்குறள் உணர்த்தும் பொருளியல் சிந்தனை என்னும் கட்டுரையில் இன்றையப் பொருளியல் அறிஞர்கள் வலியுறுத்தும் மக்கள் நலப் பொருளாதாரம் குறித்த கருத்துக்களைத் தெளிவுபட விளக்கியுள்ளார். ஒரு நாடும் அரசும் கல்வியாளர்களும் வகுக்கின்ற பொருளாதாரத் திட்டங்களும் கோட்பாடுகளும் கடைக்கோடியில் இருக்கின்ற கடைசிக்குடிமகனுக்கும் தீங்கில்லா நன்மை பயப்பதாக அமைய வேண்டும். அதனைத் திருவள்ளுவர் குறள் வழிநின்று பேராசிரியர் மா.ஆ.சுகந்தி விளக்கியுள்ளார்.

பேராசிரியர் செ.வை. சண்முகம் அவர்களின் குறுந்தொகை கடவுள் வாழ்த்துப்பாடலின் கட்டமைப்பு குறித்த ஆய்வின் நுட்பத்தை மாணவர்கள் படித்துப் பயன் பெறுதல் வேண்டும். பாடலின் கட்டமைப்பு புரிந்தால்தான் அதன்கண் சொல்லப்பட்டுள்ள செய்தியின் உண்மைகளைப் புரிந்து அனுபவிக்க முடியும். ஆங்கிலத்தில் "Structuralism" ஒரு கலையாக வளர்ந்துள்ளது. தமிழில் பேராசிரியர் அதில் வல்லவர்; அவருடைய கட்டுரை நுட்பத்தை உணர்ந்து பயிலலாம்.

அடுத்துப் பேராசிரியர் நா. பாலுசாமி அவர்களுடைய உள்ளுறையும் இறைச்சியும் குறித்த ஆய்வுக் கட்டுரை இடம் பெறுகிறது. படித்து இன்புறுக.

- ஆசிரியர் -

# திருவள்ளுவரும் மேலாண்மைக் கோட்பாடுகளும்

பேராசிரியர்
டாக்டர். கா. அரங்கசாமி
தாராபுரம்.

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

'நியூமேன்' மற்றும் 'சம்மர்' எனும் இணை ஆசிரியர்கள் மேலாண்மையை 1 ) திட்டமிடல் (Planning) 2) நிறுவன ஆக்கம் (Organising) 3) கொண்டு செலுத்துல் (Leading) 4) கட்டுப்படுத்துதல் (Controlling) என நான்கு பகுப்புக்களுள் அடக்குகின்றனர். 'ஃஎன்றி ஃபயல்' என்பவர். 1) திட்டமிடல் 2) நிறுவன ஆக்கம் 3) ஆணை வழிப்படுத்துதல் (Commanding) 4) ஒருமுகப்படுத்துதல் (Coordinating) 5) கட்டுப்படுத்துதல் என ஐந்தாகப் பகுக்கின்றார். 'லூதர் கியுலிக்' என்பவர் 1) திட்டமிடல் 2) நிறுவன ஆக்கம் 3) அலுவலர் நியமனம் 4) நெறிப் படுத்துதல் (Directing) 5) ஒருமுகப்படுத்துதல் 6) அறிக்கை அளித்தல் (Reporting) 7) வரவு செலவுத் திட்டமிடல் (Budgeting) என ஏழு வகையாகப் பகுத்துக் கூறுகின்றார். இங்ஙனமே, 'வாரன்ஃகெய்ன்' மற்றும் 'சோசப் மெசி' எனும் இணையாசிரியர்கள் 1) தீர்மானித்தல் (Decision-making) 2) நிறுவன ஆக்கம் 3) அலுவலர் நியமனம் 4) திட்டமிடல் 5) கட்டுப் படுத்துதல் 6) செய்திப் பரிமாற்றம் 7) நெறிப்படுத்துதல் என ஏழுவகை யாகப் பகுப்பர்.

மேற்கண்டவாறு பலரும் பலவிதமாகப் பகுத்துக் கூறுபவை மேலாண்மையின் செயற்பாடுகளே ஆம். ஆனால் இச்செயற்-பாடுகளைக் கொண்டு செலுத்தும் மேலாளரின் தகுதிக்கேற்பச் செயற்பாடுகளின் திறன் அமையும். மேலாளரின் தகுதி என்பது அவரது செயலாற்றும் திறனைப் பொறுத்து அமையும். செயலாற்றும் திறன் அறிவு நுட்பத்தோடு இயைந்ததாயின் பயன் மிகுதியாகும். இச்செயல் திறன் ஒருவற்கு உடன் பிறந்ததாக இருக்க வேண்டுவதில்லை. அதனைப் பயிற்சியின் மூலமே பெற முடியும் என்ற கருத்தும் கூறப்பெறுகின்றது. ஆனால் வள்ளுவப் பெருமான் இதனை ஏற்றுக் கொள்வதில்லை.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும் (குறள் : 373)

என்ற குறளின் மூலம், எவ்வளவு நுட்பமான நூல்களைக் கற்றறிந்-

தாலும் ஒருவற்கு இயல்பாக இருக்கின்ற அறிவுதான் விளக்க முறுமேயன்றிப் புதிய அறிவுத்திறன் தோன்றுதல் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். அறிவியலாளரும் நுண்ணறிவுப் பதிவு (Intellectual - powers) ஒவ்வொருவருக்கும் வேறுபட்டே அமைகின்ற தென்பர். நடைமுறையிலும், பலர் கூடியிருக்குமிடத்துக் கூறப்பெறு கின்றதொரு பொருளினை அவரவர் அறிவத்திறனுக்கேற்பவே கொள்ளு கின்றமையைக் காணலாம். எனவே மேலாண்மைக் கோட்பாடுகளின் வெற்றி அவற்றைக் கையாளுகின்ற மேலாளனைப் பொறுத்தே அமைகின்றதெனில் மிகையாகாது.

மேலாளன் என்பவன் தலைவர், தலைவனின் தகுதியே நிறுவனத்தின் தகுதியாக அமைகின்றது. மேலே பலரும் பலவாறு கூறிய மேலாண்மைக் கோட்பாடுக்ளைத் தொகுத்தால். அவை, 1) திட்டமிடுதல் 2) நிறுவன ஆக்கம் 3) நெறிப்படுத்துதல் 4) கட்டுப்படுத்துதல் எனும் நான்கு பகுப்புகளாக நிறைவுறும். இந்நான்கு திறத்திலும் செம்மை காண வேண்டுமாயின் தலைமை தகுதியுடையதாதல் வேண்டும். இத்தகு தகுதியுடைய தலைமைக்கு வேண்டுவன இவை, வேண்டாதன இவை என உடன்பாட்டானும் எதிர்மறையானும் அறத்துப்பால் மற்றும் பொருட்பால் முழுமையிலும் வள்ளுவம் பேசுகின்றது. திருக்குறளைப் பொறுத்தவரை இக்குறள் இன்னார்க்குத்தான் சொல்லப்பட்டதென முடிவு செய்ய வேண்டுவதில்லை. எடுத்துக்காட்டாகப் பொருட்பாலில் இடம் பெறும்.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு (குறள் : 385)

எனும் குறள், 'அரசன் பொருள் வரும் வழிகளைக் கண்டு பெருக்கி, அவ்வகையில் அதனை ஈட்டித் தக்க முறையில் காத்துப் பின்பு அதனைப் பல்வேறு துறைகளுக்குப் பகுத்துக் கொடுக்க வேண்டும்' எனக் கூறுகின்றது. ஒரு நாட்டை ஆளும் தலைவனுக்கும், ஒரு நிறுவனத்தை அல்லது தொழில்துறையைக் கொண்டு செல்லும் மேலாளனுக்கும் அவ்வவர்க்கு ஏற்ற அளவில் பொருந்தும். திருவள்ளுவர் தம் காலத்திலிருந்த தலைமைக்குக் கூறிய இலக்கணம், எக்காலத்திலும், எவ்விடத்தும், எப்பெயரைப் பெற்றிருப்பினும் தலைமை யாளராவோர்க்கெல்லாம் பொருந்தும் வகையில் பொதுமைப் பண்புடையதாகின்றது. இனியவை கூறல், நடுவு நிலைமை, பயனில

சொல்லாமை, வெகுளாமை, கல்வி, கேள்வி, சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைக்கோடல், கண்ணோட்டம் என்பனவும் இவை போல்வன பிறவும் எல்லார்க்கும் பொருந்துவனவன்றோ?

திருக்குறளில் மேலாண்மை பற்றி செய்தியைத் திரட்ட வேண்டுமாயின், ஆள்வினை உடைமை, தெரிந்து செயல்வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், வினைசெயல் வகை, வினைத் திட்பம், வினைத்தூய்மை, முதலானவற்றை ஆராய்வதுடன், இடன் அறிதல், காலம் அறிதல், குறிப்பறிதல் (பொருள்) முதலானவற்றையும் இணைத்துப் பார்க்க வேண்டும். இங்ஙனம் மேற்கொள்ளும் ஆய்வில் பல்கலைக்கழகங்களில் இன்றைய மேலாண்மைக்குரிய பாடத்திட்டங்களாகக் கொடுக்கப்பெற்றுள்ளவை அனைத்தும் முழுமையாக வள்ளுவம் கூறவேண்டும் என எதிர்பார்ப்பது சரியான பார்வை அல்ல ! ஆனால் மேலாண்மை குறித்த அடிப்படைக் கோட்பாடுகளுக்கான சிந்தனைகள் வள்ளுவத்தில் இடம் பெற்றிருக்கின்றன என்பதில் ஐயமில்லை எடுத்துக்காட்டாகத் 'திட்டமிடுதல்' பற்றிய சிந்தனையை எடுத்துக்கொள்வோம். இது குறித்த கருத்துக்களைப் பிற் காணுமாறு வள்ளுவப் பெருமானின் வழி நின்று வரிசைப்படுத்தலாம்.

1) ஒரு செயலைச் செய்வதன் முன் அதனைச் செய்வதால் ஏற்படும் இழப்பையும், (பொருள், காலம், மனித ஆற்றல் முதலாயின ) அச்செயல் நிறைவுறும் பொழுது கிடைக்கும் பயனையும், அப்பயன், ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டி மிகுந்த ஊதியத்தினைக் கொடுக்கின்றதா என்பதனையும் ஆராய்ந்து செயலைத் தொடங்க வேண்டும். (குறள்-461)

2) தமக்குத் தெரிந்த, தமதிடத்து அக்கறை உள்ளோருடனும் தாம் செய்யத் தொடங்கும் செயல் பற்றிய முன் அனுபவம் உடையவரோடும் ஆராய்ந்து பார்த்துப் பின்பு தாமும் நன்கு எண்ணி ஒரு செயலைச் செய்ய வேண்டும். (குறள் - 462)

3) ஆக்கம் ( லாபம் ) ஒன்றையே கருத்திற்கொண்டு அதனை அடைதற்குச் செலவிடும் மூலதனமே ஒருகால் ஆயினும் கூடும் எனும் நிலையில் ஐயத்திற்கிடமான செயலில் அறிவுடையார் ஊக்க முடையராதல் கூடாது. (குறள் - 463)

4) தமக்கு ஒரு துறை பற்றிய தெளிவு இல்லாத போது, அதனைத் தொடங்கி வீழ்ச்சியுற்று இகழ்ச்சியினைத் தேடிக் கொள்ளக் கூடாது. (குறள் - 464)

5) ஒரு செயல், அதற்கு வேண்டப்படுபவனவற்றைச் செய்யாமை-யாலும், வேண்டப்படாதனவற்றைச் செய்வதாலும் கெட்டுவிடும் என்பதனை அறிந்து செயல்பட வேண்டும். ( குறள் - 466 )

6) ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பே அதற்குரிய சாதக, பாதகங்களை ஆராய வேண்டும். அங்ஙனமின்றிப் பிறகு பார்த்துக் கொள்வோம் எனத் தொடங்கினால் இழுக்கே விளையும். (குறள் - 467)

7) ஒரு செயலைத் தொடங்கி நடைமுறைப்படுத்தும் போது அதன் ஆக்கத்திற்குக் கண்ணும் கருத்துமாக நின்று வருந்தி உழைக்க வேண்டும். அங்ஙனம் உழைக்காமற் போனால் அதன் வீழ்ச்சியை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. ( குறள் - 468 )

8) ஒரு செயலின் பயனை, அதனைத் திட்டமிட்டபடியே செயல் படுத்தும் திட்பமுடையவர் அடையமுடியும். ( குறள் - 666 )

மேற்கண்ட கருத்துக்களோடு, இக்காலத்தார் திட்டமிடுதல் பற்றிக் கூறுகின்ற கருத்தினையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வள்ளுவத்தின் சிறப்பை நன்கு உணரலாம். திட்டமிடுதல் குறித்த இக்காலத்திய கருத்துப் பின்வருமாறு அமைகின்றது. "Of all the managerial functions, planning is considered as the most basic function. Planning refers to the rational and orderly thinking about the ways and means for the realisation of the objective of the organisation" ஒரு நிறுவன ஆக்கத்திற்கு அடிப்படையாக அமைவது முறையாகச் சிந்தித்துத் திட்டமிடுதலே என்னும் இக்கருத்தினை வள்ளுவம் எங்ஙனம் விரிவாக விளக்குகின்றதென்பதனை மேற் காட்டிய எடுத்துக் காட்டுக்களின் மூலம் அறியலாம்.

அடுத்து, 'organising' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'நிறுவன ஆக்கம்' அல்லது 'நிறுவனப்படுத்துதல்' எனப் பொருள் கொள்வது பொருந்தும். திட்டமிட்டபின் அத்திட்டத்தைச் செயற்படுத்துதற்குரிய வழிவகைகளை ஒழுங்கு படுத்த வேண்டும். அதாவது தொடங்கும் தொழிலுக்குரிய கருவிகளையும், தொழிலாளர்களையும் ஒழுங்கு சேர்க்க வேண்டும் இதனை வள்ளுவம்,

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து*
*அதனை அவன்கண் விடல்* (குறள் – 517)

என விவரிக்கின்றது. 'இச்செயலை, இக்கருவியால் இத்தகையவன் செய்து முடிப்பான் எனத்தேர்ந்து, அச்செயலை அத்தகையவனிடம் விட வேண்டும்' என்பது இதன் பொருள். இங்குச் செயலுக்கேற்ற மனிதர்களும், செயலுக்குரிய கருவிகளும் சுட்டப்படுகின்றன.

தகுந்த கருவிகளோடு, உரிய காலத்தில் செயல்பட்டால் செயற்கரிய செயல் என எதுவும் இருக்கவியலாது என்பது வள்ளுவக் கோட்பாடு. இதனை,

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின் (குறள் – 483)

என்ற குறள் விளக்கும். செயலுக்குரிய கருவிகளைத் தேர்ந்தெடுத்து ஒருபுறமாக, செயலுக்குரிய மனிதர்களைத் தேர்வு செய்வது ஆராய்ந்து செய்வதற்குரியதாம். பருப் பொருள்களாகிய கருவிகளைக் காட்டிலும் அறிவுப் பொருளாகிய மனிதன் சிக்கலானவன். எவ்வெவ்வகைகளில் ஆராய்ந்து தேர்ந்தெடுப்பினும் செயற்படுங்காலத்து மாறுபடும் மனிதர்கள் பலர். (குறள் - 514) எனவே மனிதனை அவனது முகத்தை, குறிப்பாகக் கண்களைக் கொண்டே அளக்க வேண்டும். இதனை,

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின் (குறள்–708)

நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற (குறள்–710)

என்ற குறள்கள் எடுத்தியம்புகின்றன.

நிறுவன ஆக்கம் முழுமைபெற்றவுடன், கொண்ட இலக்கை நோக்கி அதனைக் கொண்டு செலுத்த வேண்டும். இதனை ஆங்கிலத்தில் 'Directing' 'Leading' 'Motivating' 'Actuating' எனப் பல சொற்களால் குறிப்பிடுவர். ஆனால் பொருள் ஒன்றுதான். மேலாளனாகச் செயல்படுபவனின் பணிகளில் இதுவும் ஒன்றாகும். இதனை 'ஆள்வினை உடைமை' 'கண்ணோட்டம்' என்ற அதிகாரங்களைக் கொண்டு அறியமுடியும். 'குடிசெயல் வகை' எனும் அதிகாரத்தாலும் சில கருத்துக்களை உணரலாம். எடுத்துக்காட்டாக ஒருவன் தான் பிறந்த குடியை உயர்த்துவதற்கு, ஆள்வினையும், ஆன்ற அறிவும் உடையனாதல் வேண்டும்.

ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி (கு. 1022)

என்பது குறள். ஒரு நிறுவனத்தை உயர்த்த வேண்டும் என அதனை நெறிப்படுத்துகின்றவனுக்கும் இவ்விரு தன்மைகளும் வேண்டப் படுவனவல்லவா?

'கட்டுப்படுத்துதல்' (Controlling) எனும் மேலாண்மைக் கோட்பாட்டிற்கான அடிப்படைக் கருத்துக்களைத் தன்னால் நிருவகிக்கப் பெறும் நிறுவனத்தின் நிறை குறைகளை ஆராய்ந்து நன்மை உண்டாகும் வண்ணம் அதனைக் கட்டுப்படுத்தி ஆள வேண்டும். என்னும் கருத்துருவாக்கத்திற்கேதுவாக,

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். – (குறள் : 511)

எனும் குறள் அமைவதைக் காண்கிறோம். இதனையே வேறு வகையாக "The Function of control consists of those activities that are undertaken to ensure that the events do not deviate from the pre-arranged plans" என இக்காலத்தில் விவரிக்கின்றனர்.

பொதுவாக மனிதனின் அறிவு, மனம் - இவற்றால் உருவாகும் வாழ்வு நிலைகள், ஆகியவற்றை வள்ளுவம் மிகத்தெளிவாக ஆராய்ந்து கூறிவிடுகின்றது. இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனித வாழ்வின் புறநிலை பெரும் மாற்றங்களுக்குட்பட்டிருக்கின்றது என்பதனை எவ்விதத்திலும் மறுத்தற்கியலாது. ஆனால் அதன் அகநிலை மாறுபட்டுவிட்டதெனக் கூறமுடியவில்லை ! கூறஇயலாதவாறு அது மாற்றங்களுக்கு உட்படுவதில்லை ! - அதாவது சான்றோர் வகுத்த எல்லைகளுக்கப்பால் அது சென்றுவிடவில்லை. சென்றுவிடமுடியாது ! எனவேதான் மனிதனின் அகநிலை தொடர்பானவற்றைப் பற்றி ஆராயும் போது வள்ளுவம் ஓர் அசைக்க முடியாத சான்றாதாரமாக நிற்கின்றது.

காடுகளில் மிருகங்களை உணவுக்காக வேட்டையாடிய ஆதிகாலந்தொட்டு, குடியரசு கோலோச்சும் இக்காலம் வரை ஒரு குழுவையோ, இனத்தையோ, நாட்டையோ வழிநடத்தும் ஆற்றல் தனிப்பட்ட மனித ஆளுமையாகவே இருந்துவருகிறது. அத்தகைய ஆளுமை எவ்வாறு சிறந்திருக்க வேண்டும் என்பதனை வள்ளுவத்தின் வழி நின்று வகுப்பது இக்காலத்திய மேலாண்மை பற்றிய கருத்துக்களுக்குத் தெளிவைத் தருவதாக அமையும். ஒரு சரியான மேலாண்மையை இனங்காட்டுவதே மேலாண்மை குறித்த கல்வியாகின்றது. மேற்குறித்த திட்டமிடல், நிறுவன ஆக்கம், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் என்பவை மேலாண்மையின் செயற்பாடுகளே. செயற்பாடுகள் மேலாண்மையின் தகுதிக்குத்தக்கவாறு வேறுபடுவன.

தொழில்களின் வகையை, நிறுவனங்களின் வகைமை முதலான-வற்றிற் கேற்பவும் மேலாண்மையின் செயற்பாடுகள் மாறுதல் களுக்குட்படுவன. ஆனால் மேலாண்மையை உருவாக்கும் காரணிகள் மாறுபடுவன அல்ல. சரியான மேலாண்மை நிறுவன வகைமை களுக்கேற்பத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் திறனுடையதாம்.

மேலாண்மையை உருவாக்கும் காரணிகளாக வள்ளுவம் பிற்காண்பவைகளைக் குறிப்பிடுகின்றது. அவற்றைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம்.

(1) மேலாண்மை அல்லது தலைமை : அன்பும், அருளும், கண்ணோட்டமும் உடையதாய் இருக்க வேண்டும். அடக்கமும், அவைஅறிதலும், அவைஅஞ்சாமையும் உடையதாய், காட்சிக்கெளியதாய், கடுஞ்சொல் இல்லாததாய், காலத்தையும் இடத்தையும் அறிந்து செயல்படுவதாய் இலங்க வேண்டும். மேலும், நிறைந்த கல்வி கேள்விகளில் சிறப்பெய்தி, ஊக்கத்தில் தளர்ச்சி இன்றி, உட்பகை கண்டு களைவதாய், சிற்றினம் சேராமல், பெரியோரைத் துணைக்கொண்டு செயல்படுவதாய் அமையவேண்டும்.

(2) மேலாண்மைக்குரிய அறிவுடைமை, நன்றின்பால் உய்ப்பதாகவும், மெய்ப்பொருள் காண்பதாகவும், உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதாகவும், ஆவதை அறிவதாகவும், எதிரதாக் காக்கும் தன்மையுடையதாகவும், அஞ்சுவதற்கு அஞ்சுவதாகவும் அமைதல் வேண்டும். இங்ஙனமிருப்பின் மேலாளனின் அறிவுடைமை எல்லாவற்றையும் உடைமை யாக்குவதுடன் அதனை அரணாகநின்று காக்கவும் வல்லதாகும்.

(3) மேலாண்மைக்குரிய செயலாற்றல் தெரிந்து தெளிவதாகவும், நடுநிலை உடையதாகவும் செயல்வகை தெரிந்து அதற்கேற்பச் செயல்படுவதாகவும் இருப்பதோடு சோம்பலின்றித் தூய்மையைக் கடைப்பிடிப்பதாகவும் இருக்க வேண்டும். வெஃகாமை என்னும் சுயநலமின்மையும் தன்கீழ்ப் பணிபுரிவார் அஞ்சுதற்குரிய செயல்களைச் செய்யாமையும் உடையதாய், மேலாண்மை, தான் ஏற்றுக் கொண்ட செயலைத்

திட்டப் நுட்பங்களோடு நிறைவேற்றும் தகுதியும், வல்லமையும் உடையதாய்ச் சிறப்பெய்த வேண்டும்.

இதுகாறும் குறிக்கப்பெற்றவை வள்ளுவம் கூறும் மேலாண்மைக் கோட்பாடுகளின் முழுமையல்ல. முழுமையாகக் கண்டறிய இன்னும் நுணுகி ஆராய வேண்டும். ஆனால் மேலாண்மையும், அதன் செயற் பாடுகளையும் வள்ளுவம் கூறுகின்றதெனக் கொள்ளும் கொள்கை வலிந்து கொள்ளப்படுவதன்று இயல்பான நிலையில் ஒரு செயலை ஆளுவோனின் தகுதிகள் என்னவாக இருக்கவேண்டும் என்பதனையே வள்ளுவம் பேசுகின்றதென்பதே உண்மை. இக்கால மேலாண்மைத் துறையைச் சார்ந்த அறிஞர்கள் தமக்கு வேண்டிய கோட்பாடுகளை மேலைநாட்டு அறிஞர்களின் சிந்தனைகளைக் கொண்டுதான் வடிவமைக்க வேண்டுமென்பதில்லை. அதற்கு வள்ளுவம் பெருந் துணைபுரியும் என்பதை உணரவேண்டும். உணர்வார்களா?

1. W.H. Newman and C.E. Summer; The Process of Management (1949), P.11.
2. Henri Fayol; General and Industrial Management (1949), P.15
3. Luther Gulick & L. Urwick (Eds) Papers on Science of Administration
4. Warren Haynes & Joseph Massie; Management Analysis and Cases, P.11.
5. P.C. Tripathy & P.N. Reddy; Principles of Management, p.7
6. Kathiresan & Radha; The Principles of Management, P.11.
7. "To Organise a business is to provide it with everything useful to its functioning; personal, Raw materials, tools capital. All this may be divided into two main sections, the human organisation and materials organisation"

   - P.C. Tripathi & P.N.Reddy;
   Principles of Management, P.4
8. J.S. Chandran; Management Threory & Practice, P.17

# திருக்குறள் உணர்த்தும் பொருளியல் சிந்தனைகள்

முனைவர் மா.ஆ. சுகந்தி
உதவிப் பேராசிரியர்
*திருச்செந்தூர்.*

## முன்னுரை

*தமிழ் இலக்கியத்தின் மணிமுடியாகப் பிரகாசிப்பது வள்ளுவர்* படைத்த திருக்குறள். தமிழ் இலக்கியப் பெட்டகத்துள் நீதி நூல் களுக்கென்று ஒரு தனி இடம் உண்டு. தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும் சமயச் சார்பற்ற தன்மையையும் மனித நலக் கோட்பாட்டு நெறிகளையும் தொன்று தொட்டு தமிழ் நீதிநூல்கள் உலகிற்கு உணர்த்தி வருகின்றன. மேலைநாட்டு அறிஞர்களின் கருத்தினை முதன் முதல் கவர்ந்த தமிழ் இலக்கிய நூல் திருக்குறள். நீதிநூல்கள் அனைத்திலும் படிப்போரை இன்புறுத்தும் இயல்பைக் காட்டிலும் அறிவுறுத்தும் இயல்பே மேலோங்கி நிற்கின்றது. ஆனாலும் விழுமிய கருத்துக்களும், சொல்நயமும், பொருட்பொலிவும், எடுத்து உரைக்கும் நிலையும் திருக்குறளைத் தன்னிகரற்றுத் திகழச் செய்கின்றன.

திருவள்ளுவர் தம் குறள்களில் எண்ணற்ற பொருளியல் சிந்தனைகளை வடித்துத் தந்துள்ளார். பொருள் உள்ளவர்கள் சமுதாயத்தில் வலிமை உள்ள்வர்களாக விளங்குகிறார்கள். பொருளற்றவர்கள் ஒதுக்கப்பட்டு அடையாளம் இழக்கின்றார்கள். ஒவ்வொரு தனி மனிதனையும் வலுப்படுத்தி, வழிப்படுத்தி, மனத்தில் வலுவுள்ள, திடமான நம்பிக்கை கொள்ள வைப்பது பொருளே ஆகும். அத்தகைய பொருளியல் சிந்தனைகளை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பொருளியல் வரையறை

மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகளைக் கூறுவது பொருளியல் Economics என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாக இன்று 'பொருளியல்' என்னும் சொல்லே ஆட்சி பெற்று வருகிறது. மக்கள் பண்பாடு, நாகரீகம் அனைத்தும் இப்பொருளியலின் அடிப்படையிலேயே அமைகின்றன. பொருளியல் பணிகளின் தொடக்கமே மனிதனின் தேவைகள்தான்.

மனிதனுக்குப் பல்வேறுபட்ட தேவைகள் உண்டு. இவை எல்லாவற்றையும் அறிவதற்கும், ஆராய்வதற்கும் பொருளியல் என்னும் ஒரு துறையறிவு தோன்றியது.

பொருளியல் என்பது ஒரு பெருங்கல்வி. அது இன்று கல்விக் கழகங்களிலும் தொழில் நிறுவனங்களிலும் நிதி நிறுவனங்களிலும் ஆல்போல் பரந்து விரிந்து வளர்ந்து வருகிறது. இன்றைய சமூக வாழ்விற்கும் தனி மனித வாழ்விற்கும் பொருளியல் கல்வி இன்றியமையாததாக அமைந்துள்ளது. மக்களின் பண்பாடு, நாகரீகம் அனைத்தும் இப்பொருளியலின் அடிப்படையிலேயே அமைகின்றன என அறிஞர்கள் கூறுகின்றனர்.

பொருளியல் பணிகளின் தொடக்கமே; மனிதனின் தேவைகள்தான். மனிதனுக்குப் பல்வேறு தேவைகள் உண்டு. முதன்மையானது உணவு, உடை, உறையுள் ஆகியவை ஆகும். பண்டைக்கால மனிதன் எளிய வாழ்க்கை வாழ்ந்ததால் அவனது தேவைகள் எளிதில் நிறைவேறின. தன் தேவைகளை அவன் தானே தன் உழைப்பால் நிறைவேற்றிக் கொண்டான். தனக்குக் கிடைக்காத ஒரு சிலவற்றை பண்டமாற்று முறையில் பெற்றுக் கொண்டான். மக்கள் தொகை பெருகியதால் பண்டமாற்றுக்குப் பதில் அதனைப் போன்று பொதுவாகப் பயன்படும் ஓர் ஊடுபொருளில் (a common medium of exchange) பணம் (Money) என்பது தோன்றியது. இப்பணத்தால் எல்லாவற்றையும் வாங்க முடிந்தது. இப்பணத்தினை ஒட்டி உலக மக்கள் அனைவரும் உறவு கொள்ளும் ஒரு சமூக அமைப்புத் தோன்றியது. இவை எல்லாவற்றையும் அறிவதற்கும், ஆராய்வதற்குமே பொருளியல் எனும் ஒரு துறையறிவு தோன்றியது.

பொருளியற் பேரறிஞர் ஆல்ப்ரெட் மார்ல் (Alpred Marshall) மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பண்டங்களைத் தேடுதலுக்கும் படைத்தலுக்கும், பின்னர் அவற்றை நுகர்ந்து பயன் துய்த்தலுக்கும், அவன் ஒரு சமூகமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்து மேற்கொள்ளும் முயற்சிகளையும் பணிகளையும் பற்றி ஆராய்ந்து உரைப்பது பொருளியல் என்று விளக்கம் தருகிறார்.

## அறமும் பொருளும்

அறம் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டது. பொருளியலும் மக்களின் நல்வாழ்வையே நோக்கமாகக்

கொண்டது. பொருளியல் தரும் ஒரு முடிவு பயனுடையதோ? பயனற்றதோ? நன்மையோ? தீமையோ? என அறுதியிடுவதற்கு அறமே துணை நிற்கிறது. இதனை வள்ளுவர்,

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்" (குறள் : 755)

என்கிறார். இவ்வுலகச் சமுதாயம் பொருளில்லாத வரை ஒருபோதும் மதிப்பதில்லை. ஆதலால் பொருள் நிறைய சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் பதிவு செய்யப்படுகின்றது. மனித இனம் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்று பொருள் ஈட்டுதல். பொருள் இல்லாமல் எந்த நன்மையையும் அடைதல் இயலாது. தீய வழிகளில் பொருள்கள் ஈட்டாமல் முறையாகத் திறனறிந்து பொருள் ஈட்டுதலே அறத்தையும் இன்பத்தையும் தரவல்லது என்பதை வள்ளுவர்,

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள் : 754)

என்கிறார். பொருள், அறவழியில் ஈட்ட வேண்டும்; பொருளைப் பொருளுக்காகவே மட்டும் பெறுதல் கூடாது. நேர்வழியில் பொருள் ஈட்ட வேண்டும் என வள்ளுவம் உலக மக்களுக்கு வழிகாட்டுகிறது.

நேர்மையான வழிகள் அன்றி தீயவழிகளில் செல்வம் சேர்த்தால் அச்செல்வம் தீராத துன்பத்தைத் தருவதாகும். அவ்வாறன்றி அவ்வழியில் பொருள் சேர்த்தவனை அவன் நல்லவனா? தீயவனா? என அவனது மக்கள் அடையாளம் காட்டுவர். இதனை வள்ளுவர்,

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்" (குறள் : 114)

என்கிறார். சமுதாய முன்னேற்றத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் அவசியத்தேவை பொருளாதார வளர்ச்சி ஆகும். ஆதலால் பொருளைத் திறனறிந்து அறவழியில் ஈட்டுதல் வேண்டும் என்ற பொருளியல் சிந்தனை பதிவு செய்யப்படுகின்றது.

## பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் சிறுசிறு கூட்டங்களாக வாழ்ந்து வந்தனர். இயற்கையின் சீற்றம், கொடிய விலங்குகள், நோய்கள் போன்றவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய நிலையில் வாழ்ந்தனர். இதனால் அவர்கள் கூட்டாகச் சென்று,

உணவைப் பெற்று பகிர்ந்து உண்டனர். இம்முறையைக் கூட்டு உற்பத்திமுறை என்பர். இவ்உற்பத்தி முறையைக் கொண்ட சமுதாயத்தில் மக்களிடையே ஏழை, பணக்காரன் என்ற வகுப்பு வேறுபாடுகள் காணப்பெறவில்லை. அனைவரும் சமமாகவே மதிக்கப் பெற்றனர். மக்கள் முயற்சியும் ஒரு சீராக இருப்பதில்லை. செல்வம் சேர்தலும் ஒருசீராக இல்லை. முயற்சி மட்டும் பொருளீட்டலுக்குப் போதாது வாய்ப்புகளும் தேவை, வாய்ப்பையும் படைக்கலாம்; ஆனால் வாய்ப்புக்களும் வாய்க்க வேண்டும். முதலும் தேவை முதலில்லார்க்கும் ஊதியம் இல்லை. இக்காரணங்களாலும் இன்னோரன்ன காரணங்களாலும் மக்கள் பொருள் வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. மேடுபள்ளங்கள் ஏராளம். மலைகளும் உண்டு. மடுக்களும் உண்டு. காலம் செல்லச் செல்ல இவை போன்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் "Class Consciousness" வகுப்பு வாதம் தோன்றியது. வள்ளுவர் கூறும் சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளமையை,

"பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்" (குறள் : 751)

என்கிறார். இக்குறளில் ஒரு பொருட்டாக மதிக்கப்படாதவனையும் மதிக்கும்படி செய்வது செல்வமாகும். அதைத் தவிர வேறெதுவும் சாதாரண மனிதருக்குப் பெருமையைப் பெற்றுத் தராது. ஆகவே ஒருவன் கண்ணோடும் கருத்தோடும் அதைச் சேர்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (குறள் : 753)

என்கிறார். பொருள் என்று சொல்லப்படுகின்ற அணையாத விளக்கு. தன்னைச் சேமித்து வைத்தவர் நினைத்த இடத்திற்குச் சென்று அங்குள்ள இருளைப் போக்கும்.

"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை" (குறள் : 758)

ஒருவன் தன் கையில் உள்ள பொருளை வைத்துக் கொண்டு ஒரு செயலைச் செய்வது என்பது மலையின் மேல் ஏறி நின்று யானைப் போரைப் பார்த்தல் போன்றதாகும்.

"செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்" (குறள் : 759)

ஒருவன் பொருளைத் தேடிச் சேர்க்க வேண்டும். அதுதான் பகைவனின் செருக்கை அழிக்கக்கூடிய ஆயுதம். அதைவிடக் கூர்மையான ஆயுதம் வேறொன்றுமில்லை.

வள்ளுவர் தம் குறட்பாக்களில் பொருளாதாரச் செய்திளை வடித்துத் தந்துள்ளார். பொருள் உள்ளவர்கள் சமுதாயத்தில் வலிமை உள்ளவர்களாக வாழ்கின்றார்கள். பொருளற்றவர்கள் சமுதாயத்தில் ஏதோ ஓர் மூலையில் ஒதுக்கப்பட்டுப் பின் அடையாளம் இழக்கின்றார்கள். ஒவ்வொரு மனிதனையும் வலுப்படுத்தி, வளப்படுத்தி மனத்தில் வலுவுள்ள நம்பிக்கை கொள்ள வைப்பது செல்வம் என்பது புலனாகிறது.

## பொருள் பங்கீட்டுக் கொள்கை

தனக்குக் கிடைத்ததைப் பங்கிட்டு, தானும் உண்டு பல உயிர்களையும் காப்பாற்றுதல் பொருளியல் அறிவு நூல்கள் கூறும் கோட்பாடுகளில் தலைசிறந்ததாகும் என்பதை,

*"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் : 322)

என சமூக அமைதிக்கான மிகப்பெரிய தத்துவத்தை வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார். தனக்குக் கிடைத்த உணவைத் தனக்கென்று மட்டும் பதுக்கி வைத்துக் கொள்ளக்கூடாது. தனக்குக் கிடைத்த உணவுப் பண்டங்களை ஏனைய உயிர்களும் உயிர் வாழும் வகையில் பகிர்ந்து அளிக்க வேண்டும் (Social Welfare Economics).

தர்மங்களில் எல்லாம் தலைசிறந்த தர்மம் பசிப்பிணி தீர்த்தலே ஆகும். பசி வரும்போது ஏனைய தர்மங்கள் அழிந்து போகின்றன. ஆகவே, தனக்குக் கிடைத்த உணவை எவன் ஒருவன் ஏனைய உயிர்களுக்கும் பகிர்ந்துஅளித்து பசி போக்குகிறானோ அவன் தர்மத்தைச் செய்கிறவன் மட்டுமல்ல. தர்மத்தைக் காக்கிறவனும் ஆவான். எனவே, உணவைப் பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்துத் தானும் உண்ணுதலே சிறந்த தர்மம் ஆகும்.

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றல் செல்வம்
*நயனுடை யான்கண் படின்"* (குறள் : 216)

இக்குறளில் பயன் தரக்கூடிய சிறந்த மரம் யாவருக்கும் பயனளிக்கும் வகையில் ஊரின் நடுவிலே அமைய வேண்டும் என்பது வள்ளுவர்

இருந்தால் அந்தச் செல்வம் தேவைப்படுகின்ற அனைவருக்கும் பயன்படும். நாம் தேடிய செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும். அவ்வாறு கொடுத்து மகிழும் இன்பமே வாழ்வின் பேரின்பமாகும்.

## அளவறிந்து வாழும் வாழ்க்கை

*வாழ்க்கைத் துணை என்று பெண்ணைக் கூறினாலும்* பெண்களை வாழ்க்கைக்கு முதலாகவே வைத்துக் கூறுகின்றார். இதனை,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" (குறள் : 51)

என்கிறார் வள்ளுவர். மனையறத்திற்குத் தக்க நற்குணச் செய்கைகளை உடையவள் தான் மனைவி என்கின்றனர். மனைவி என்பவள் *கணவன், விருந்தினர், சுற்றத்தவர் மற்றும் வறியவரைப் போற்ற* வேண்டும். மேலும் கணவனின் வருவாய்க்குத்தக்க வாழ்க்கை-யுடையாள். இவளை வளத்தக்காள் என்கிறார் வள்ளுவர். ஒருவன் தன் வாழ்க்கையில் இன்பம் அடைவதற்கு முறையாகப் பொருள் தேட வேண்டும். அவ்வாறு தேடிய பொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். *சிக்கனம் இழந்த குடும்பம் பொருளாதாரத்தில் நலிவடையும்.* இதனை வள்ளுவர்,

"ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி" (குறள் : 477)

ஆற்றில் இட்டாலும் அளவோடு இடவேண்டும் என்னும் பழமொழிக்கேற்ப தன்னிடம் உள்ள பொருளை அளவு அறிந்து அதற்கேற்ப கொடுக்க வேண்டும். அதுவே பொருளைப் போற்றி வழங்கும் நெறியாகும்.

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்" (குறள் : 479)

ஒவ்வொருவரும் தன்னிடம் உள்ள செல்வத்தின் தன்மை அறிந்து அதற்குத் தகுந்தபடி வாழவேண்டும். அவ்வாறு வாழாதவனுடைய வாழ்க்கை செழிப்புடையது போலத் தோன்றி காணப்பட்டு விரைவில் அழிந்து போகும்.

## பொருளாதார உரிமைகள்

ஒவ்வொரு மனிதனுக்கும் பொருள் மிகவும் இன்றியமையாததாகும். அருள் இல்லாதவர்க்கு மேலுலகில் மட்டும்தான் இடம் இல்லை. ஆனால் பொருள் இல்லாதவர்க்குத் தான் வாழ்கின்ற உலகில் இடம் இல்லை. இதனை,

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள் : 247)

என்று பொருட்செல்வத்தின் பயனைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

பொருள் இல்லாமல் மனித வாழ்க்கை சாத்தியமில்லை. ஆனால் அந்த அடிப்படைப் பொருளைப் பெறுவதற்கு உரிமை உண்டு. அவற்றை பெறுவதுதான் பொருளாதார உரிமையாகும். பொருளைப் பொருளுக்காகவே மட்டும் பெறுதல் கூடாது. அதனை அறவழியில் உரிமையோடு ஈட்ட வேண்டும். திருவள்ளுவர் பழியஞ்சிப் பொருளைத் தேடு என்று கூறுகிறார். முயற்சி செய்து அறவழியில் தேடு. தேடிய பொருளைப் பகிர்ந்துகொடு. இதுதான் சிறந்த நெறி. இதனை,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள் : 212)

என்று கூறுகிறார். உழைத்து ஈட்டிய பணத்தை தகுந்தவர்க்கு அளிக்க வேண்டும். அறவழியில் பழி பாவத்திற்கு அஞ்சிப் பணம் சேர்த்து அதனைப் பலருக்கும் பகிர்ந்து அளித்து வாழ்ந்து வந்தால் ஒருவனுடைய சந்ததி வாழையடி வாழையாகத் தொடர்ந்து வரும்.

## நயத்தக்க நாகரிக வாழ்வு

ஒருவன் புகழுடன் பயனுடைய வாழ்க்கை வாழவும் இன்முகத்துடன் பொருள் ஈட்டவும் வள்ளுவம் கூறும் முறைகள் பல உள்ளன. புகழுடன் வாழவேண்டும் என்பது இச்சமூகத்தில் சான்றோர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. தோன்றின் புகழொடு தோன்ற வேண்டும் என்றுரைக்கிறார் வள்ளுவர்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" (குறள் : 231)

செல்வமானது யாரிடத்திலும் நிலையில்லாதது. அதனால் வறிய-வருக்குக் கொடுத்து உதவி செய்தல் வேண்டும். அதனால் புகழ் உண்டாகும். அச்செல்வத்தைப் பயனற்றுப் போகுமாறு செய்தல் ஆகாது. ஒருவர் புகழ்பெற வாழ்வதற்கு, பிறருக்குப் பொருளைக் கொடுத்து உதவி செய்தல் வேண்டும் என்ற உண்மையினை வள்ளுவர் எடுத்துரைக்-கின்றார். மேலும்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் : 50)

இங்கு வலியுறுத்தப்படும் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. இல்லற வாழ்க்கையைச் செம்மையாக நடத்துகின்றவன் மனித நிலையிலும் மேம்பட்ட நிலையை அடைகின்றான். தெய்வங்களுக்குக் கிடைக்கும் மரியாதையும் அங்கீகாரமும் அவனுக்குக் கிடைத்து விடுகிறது.

இல்வாழ்க்கை போற்றத்தக்க வாழ்க்கை. தர்ம நெறியோடு அதைக் கடைப்பிடிக்கின்றவன் அவனைச் சுற்றியுள்ள மக்களால் தெய்வமாக மதித்துப் போற்றப்படுகின்றான். தெய்வநிலை என்பது மனித நிலையிலிருந்து வேறுபட்டதல்ல மேம்பட்டது. இல்வாழ்க்கையில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் அந்த வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து தெய்வநிலைக்கு அதை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

## முடிவுரை

ஒரு நாடு முன்னேற்றம் அடைய அந்நாட்டில் மக்கள் நல பொருளாதாரம் (Social Welfare Economic Policy) ஊக்குவிக்கப்பட வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கு வறுமையும் அறியாமையும் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும். ஒருநாட்டின் திட்டங்களை இதன் அடிப்படையில் அமைத்தால் அந்நாட்டின் முன்னேற்றம் மிக விரைவில் எளிதாக ஏற்பட்டு விடும் என்பது வள்ளுவம். இக்கோட்பாடு இன்று உலகம் முழுவதும் உள்ள பொருளியல் அறிஞர்களால் வலியுறுத்தப்படுகிறது.

# குறுந்தொகை : கடவுள் வாழ்த்து கட்டமைப்பு ஆய்வு

முனைவர்.
**செ.வை. சண்முகம்,**
சிதம்பரம்.

## முன்னுரை

*கவிதைக்கு யாப்பு வடிவம் முக்கியமானது. ஆனால் தமிழ்க் கல்வி* உலகில் கவிதை யாப்பு சடங்குச் செய்தியாக ஆகிவிட்டது. அதாவது பாவகையை அடையாளம் காணுவதோடு அல்லது குறிப்பிடுவதோடு நின்றுவிட்டது. அது எப்படிக் கட்டமைக்கப்பட்டது என்று பெரும்பாலானவர்கள் பார்ப்பதே இல்லை. யாப்பு மாணவர்களுக்குத் தேர்வுக்குரிய ஒரு பாடம் அல்லது ஆய்வாளர் சிலருக்கு உரிய தலைப்பு என்ற முறையில் இன்று யாப்பு கருதப்பட்டு வருகிறது. அதனால் கவிதையின் அடிஅமைப்பு, சீரமைப்பு முதலியனவும், தொடை அமைப்பும் வெறும் வாய்பாடாக அமைந்துவிட்டன. அவை மூலம் கட்டமைப்பின் வடிவக்கோலம் உணர்ந்து கவிதை அழகியல் உணர்வு உணரப்படவில்லை.

## யாப்பு

கவிதைக்கு அடியே அடிப்படை அலகு. அடி அமைப்பைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் *கூறிய* பொழிப்பு, ஒரூஉ, தொடை அமையக்காரணம் என்ன ? அடியின் சீர் எண்ணிக்கை மாறுபடக் காரணம் என்ன? சங்கப் பாடல்களில் ஒரு சில அடிகளில் மட்டும் தொடை அமைவது ஏன்? என்று கேள்விகளை எழுப்பிக்கவிதையை ஆழ்ந்து நோக்குதலே அமைப்பு அழகை உணர வழிவகுக்கும்.

பொருள் நிலையில் ஒரு கவிதையை, கருத்து அலகாகப் பிரித்து முன்னும் பின்னும் மாற்றி ஏன் பொருள் கொள்கிறோம் என்றும், கவிதையை மீண்டும் மீண்டும் நோக்கவே கட்டமைப்புச் சிறப்புப் புலனாகி, அழகு உணர்வு தோன்றும். தொடை அமைப்பும், வண்ணம் - குறிப்பாக ஒலி அடிப்படையில் வண்ண அமைப்பும் சேர்ந்து கவிதையின் ஒலிக்கோலம் அமைகிறது. மொழி அமைப்பு நோக்கில் ஒருமுகப்போக்கு, சொல் திருப்புரை போன்றவைகளைச் சொற்கோலமாகக் கருதலாம். பொருட்கோலம் என்பது பொருண்மை இயல் நோக்கில் பார்க்கப்பட வேண்டிய ஒன்று. இப்படிக் கவிதையைப் பலவகை நோக்கில் ஆழ்ந்து பார்க்கும்பொழுது அதன் பல நிலைக் கட்டமைப்பு, ஒழுங்கமைவு (Pattern) புலனாகி, கவிதை அழகியலை உணரவழி வகுக்கும். அந்த

ஆழ்ந்த நோக்கத்தில்தான் கவிதையின் கட்டமைப்பில் ஒழுங்க-மைவைக் 'கட்டமைப்பு அழகாக' உணரமுடியும்.

## தூக்கு

'கவிதையின் அடிப்படை அலகு அடியே' அதனால்தான் தொல்காப்பியர் 'அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே' (செய். 35) என்கிறார். கவிதையை வாய்விட்டுப் படிக்கும்பொழுது ஒவ்வொரு அடியையும் நிறுத்திப் படிப்பது இயல்பானது. ஓர் அடியில் உள்ள சீர் எண்ணிக்கையில் சந்தேகம் வரும் பொழுது எங்கே நிறுத்தம் செய்து வாசிக்கிறோம் என்பதைப் பொறுத்தே அடியின் அமைப்பு அமையும். அதனால் அடி நிறுத்தம் செய்து வாசிக்கிறோம் என்பதைப் பொறுத்தே அடியின் அமைப்பு அமையும். அதனால் அடி நிறுத்தம் என்பதும் கவிதையில் முக்கியமானதாகக் கருதப்படும். அதைப் பேராசிரியரும், அவரையொட்டி நச்சினார்க்கினியரும் 'தூக்கு' என்று குறிப்பிட்டு அதன் அவசியத்தை, செய்யுளியலில் தூக்கு (செய்.86) பற்றிய சூத்திரத்தில் விரிவாக ஆராய்ந்துள்ளார்கள். (சண்முகம். 1998 : 228-43) அந்தக் தூக்கு தொல்காப்பியர் குறிப்பிடும் தூக்கிலிருந்து மாறுபட்டது. தொல்காப்பியர் குறிப்பிடும் தூக்கு செய்யுள் முழுமைக்கும் உரியது. மாறாகப் பேராசிரியர் குறிப்பிடுவது ஓர் அடிக்கு மட்டும் உரியது. இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ஒவ்வோர் அடியும் நிறுத்தம் செய்து வாசிப்பதாலேயே தூக்கு அமைகிறது என்பதே.

## பிணை

கவிதையின் ஓர் அடியே யாரும் ஒட்டு மொத்தமாகப் படிப்பதில்லை. அதாவது அடிக்குள்ளும் நிறுத்தம் செய்தே வாசிக்கிறோம். நாலு சீர் கொண்ட பாடலிலும், இரண்டாவது சீருக்குப் பிறகோ, மூன்றாவது சீருக்குப் பிறகோ ஓரளவு நிறுத்தம் செய்தே வாசிக்கிறோம். மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் - என்ற குறளடியை (3) மலர்மிசை ஏகினான் என்பதை ஒரு பகுதியாகவும், மாணடி சேர்ந்தார் என்பதை மற்றொரு பகுதியாகவும் கொண்டே படிக்கிறோம். அதாவது இரண்டாவது சீருக்குப் பிறகு நிறுத்தம் செய்து படிக்கிறோம் என்பது பொருள். இதை 2+2 என்று குறிப்பிடலாம். அதாவது இரண்டாவது சீருக்குப் பிறகு நிறுத்தம் இருக்கிறது என்பது பொருள். 'கற்றதனாலாய பயனென் கொல்' என்ற மூன்று சீரை ஒரு பகுதியாகவும் வாலறிவன் என்பதை மற்றொரு பகுதியாகவும் கொண்டே படிக்கிறோம். இதை 3+1

என்று குறிப்பிடலாம். இந்த நிறுத்தமே பிணை என்று அழைக்கப்படுகிறது.

பெரும்பாலும் ஓர் அடிக்குள் ஒரு நிறுத்தமே இருக்கும். ஒரு சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பிணை நிறுத்தமும் அமைவதுண்டு. "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்" என்ற (42) குறளடியில் துறந்தார்க்கு என்பதை ஒரு பகுதியாகவும், துவ்வாதவர்க்கு என்பதை மற்றொரு பகுதியாகவும் கொண்டே நிறுத்தி வாசிக்கிறோம். அதனால் இங்கு 1+2+1 என்று பிணை நிறுத்தம் அமைவதாகக் கருதவேண்டும். அதற்கு முக்கியக்காரணம் அவை நாலாம் வேற்றுமை ஏற்ற மூன்று உம்மைத் தொடராக அமைவதே.

'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து' (குறள் : 1085)

இங்கு மூன்று ஓகார இடைச் சொற்கள் மாற்றுப் பொருளில் அமைந்துள்ளதால் 1+1+1 என்ற மூன்று பிணைகள் அமைந்துள்ளன. மூன்று மாற்றும்மையாக ஓகாரம் இருப்பதால் மூன்று பிணை அமைந்துள்ளதாகக் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியர் ஓர் அடிக்குள்ளேயே பொழிப்பு (முதல் சீரும் மூன்றாவது சீரும் தொடை ஒற்றுமை உடையது (செய்.97) ஒரூஉ (முதல் சீரும் நாலாவது சீரும் (செய்.98) ஒத்து வருவது) என்ற இரண்டு வகைத் தொடைகள் குறிப்பிடப்படுவதாலேயே ஓர் அடிக்குள் நிறுத்தம் இருப்பதை உள்ளுர உணர்ந்திருக்கிறார் என்பது புலப்படுகிறது. இந்த அடிப்படையிலேயே சீருக்கும் அடிக்கும் இடைப்பட்ட 'பிணை' என்ற புதிய யாப்பு அலகு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால் ஓர் அடிக்குள் எங்கு நிறுத்தம் செய்து படிக்கிறோம் என்பதையே பிணை அலகு குறிப்பிடுகிறது. பெரும்பான்மையும் ஒன்றுக்கு மேற்பட்ட சீர் பிணையாக அமைவதால் பிணைக்கட்டு இங்குக் குறிப்பிடப்படுகிறது.

## தொடைக்கட்டு

இடைக்கால இலக்கியங்களில் நான்கு அல்லது ஐந்தடிகள் உள்ள பாடல்கள் ஒரே அடி எதுகையோ, மோனையோ பெற்று இருக்கும். சில பாடல்கள் முதல் இரண்டடி ஒரு தொடை அமைப்பும், பின் இரண்டடி ஒரு தொடை அமைப்பும் கொண்டதாக அமைந்துள்ளதைப் பார்க்கலாம். யாப்பிலக்கண ஆசிரியர்கள் முன்னதை ஒரு விகற்பப்பாடல் என்றும், பின்னதை இரு விகற்பப்பாடல் என்றும் அழைப்பார்கள். அதாவது

இடைக்காலப் பாடல்கள் அடியைப் பிரித்து அறிவதற்குக் கூட அடியின் தொடை அமைப்பு பயன்பட்டது. மாறாகச் சங்க இலக்கியப் பாடல்களில் அடித்தொடை முழுவதும் பின்பற்றப்படுவதில்லை. 'முட்டுவேன்கொல் தாக்கு வேன்கொல்' என்ற குறுந்தொகைப் பாடலில் அடி, தொடை எதுவும் அமையவில்லை. மாறாகப் பல பாடல்களில் முதலிலோ, இடையிலோ, கடையிலோ இரண்டு அடிகளில் மட்டும் அடித்தொடை அமைந்து காணப்படுகிறது. 'அருளும் அன்பும் நீக்கி' என்ற குறுந்தொகைப் பாடலில் (20) முதல் இரண்டு அடிகளில் மட்டும் அடி எதுகை பெற்றுள்ளது. அதாவது சங்கப் பாடல்களில் அடித்தொடை கட்டாயமாகப் பின்பற்றப்படாததால் ஒரு பாடலில் எந்த இரண்டு அடிகள் அடித் தொடை அமைந்திருக்கிறது என்று பார்ப்பது குறிப்புப் பொருளை உணர வழிவகுக்கும். ஒரு பாடலில் அடித்தொடை அமைந்த அடிகளை ஓர் அலகாகக் கொள்வதே 'தொடைக்கட்டு' என்று குறிப்பிடப்படுகிறது.

### குறுந்தொகை - கடவுள் வாழ்த்து

"தாமரை புரையும் காமர் சேவடி
பவழத்து அன்னமேனி, திகழ்ஒளி,
குன்றி ஏய்க்கும் உடுக்கை, குன்றின்
நெஞ்சுபக எறிந்த, அஞ்சுபர் நெடுவேல்
சேவலம் கொடியோன், காப்ப
ஏம வைகல், எய்தின்றால் உலகே,"

### பிணைக்கட்டு

2+2 = முதலாவது அடி
3+1= இரண்டாவது அடி
3+1= மூன்றாவது அடி
2+2 = நான்காவது அடி
2+1= ஐந்தாவது அடி
2+2 = ஆறாவது அடி

முதல் அடியில் உள்ள பிணைக்கட்டு பொழிப்பு எதுகையாலும், இரண்டாவது அடியில் ஒரூஉ இயைபாலும் மூன்றாவது அடியில் ஒரூஉ முற்று மோனையாலும், நான்காவது அடியில் பொழிப்பு எதுகையாலும், ஆறாவது அடியில் இணைமோனையாலும் உறுதிபட, ஐந்தாவது அடி பிணைக்கட்டுக்குத் தொடை நோக்கில் உள்ளார்ந்த சான்று இல்லை. என்றாலும் தொடரியல் நிலையில் எழுவாய்-பயனிலை என்ற முறையில்

பிணைக்கட்டு உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம். இங்குப் பிணை நிறுத்தம் பெரும்பான்மையும், தொடை அமைப்பு நோக்கில் அமைந்துள்ளது. அதை மொழி அமைப்பு நோக்கிலும் நியாயப் படுத்தமுடியும் என்பது சுட்டிக் காட்டத் தகுந்தது. முதல் அடியில் உவமானத் தொடர் + உவமேயத்தொடர் என்ற முறையிலும், இரண்டாம் அடியில் இரண்டு உம்மைப் பெயர்த் தொடர்கள் என்றமுறையில் பெயர்த் தொடர் + பெயர்த் தொடர் என்ற முறையிலும், மூன்றாம் அடியில் அடிவகையுளி அதாவது ஒரு தொடரும், இன்னொரு தொடரின் பகுதி என்ற முறையிலும், நான்காம் அடியில் பெயரெச்சத் தொடர் என்ற தொடர் முறையில் தொடர்பெயரெச்சம் + பெயர்த்தொடர் என்ற முறையிலும், கடைசி அடியில் ஒரு வாக்கியம் என்ற முறையில் செயப்படுபொருள் + பிறதொடர் என்ற முறையிலும் பிணை நிறுத்தங்கள் அமைந்துள்ளன.

### தொடைக்கட்டு

இந்தப் பாடலில் முதல் இரண்டு அடியும் எழுத்தடி இயைபாலும், இறுதி இரண்டு அடிகள் அடிஎதுகையாலும் தொடைக்கட்டுப் பெறுகின்றன. முதல் தொடைக்கட்டு அகஉறுப்பு என்ற பொருள் ஒற்றுமை (அடி, மேனி) உடையது. மாறாக அடுத்த அடி (ஆடை - உடுக்கை) புறத்துறுப்பு என்ற பொதுமை பெறுவதால் அவை ஒரு தொடைக்கட்டு என்பது உறுதி ஆகின்றன. இறுதி இரண்டு அடிகளும் கடவுள் வாழ்த்து என்ற முறையில் பொருள் ஒற்றுமை பெறுவதால் ஒரு கட்டாக அமைகின்றன. இன்னொரு நிலையில் முதல் நான்கு அடிகளும் அவருடைய உடல் வருணனை என்ற முறையில் பொதுமைப்படுவதால் அது ஒரு பொருள் அலகு என்று கொள்ள வைக்கிறது.

### அடிக்கட்டு

இந்தப் பாடலில் ஆறு அடிகள் அமைந்திருப்பது முருகனுக்கு மற்றொரு பெயராக உள்ள ஆறுமுகம் என்பதன் பிரதிபலிப்பாகவும் 'நமகுமாராய' என்னும் ஆறெழுத்து மந்திரத்தின் பிரதிபலிப்பாகவும் அமையும் என்பார் பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியார் (1941) மேலும் இங்குச் சேவடி, மேனி, ஒளி, உடுக்கை, நெடுவேல், கொடி ஆகிய ஆறு உறுப்புகள் அமைந்துள்ளதும் ஆறுமுகம் என்பதற்குக் கூடுதல் சான்றாகும்.

கடவுளின் உறுப்புக்களில் திருவடியே முக்கியமான சிறப்புடைய-தாகக் கருதுவதே பக்தி இலக்கிய மரபு. வள்ளுவரும் கடவுள் வாழ்த்தில்

திருவடியின் சிறப்பைப் பல குறள்களில் நற்றாள் (2), மாணடி (3) என வற்புறுத்தியுள்ளார். பிற்காலப் பக்தி இலக்கியங்களிலும் இந்த உண்மை வலியுறுத்தப்படுவதைக் காணலாம். உதாரணமாக அப்பர், 'குனித்த புருவமும்' என்ற பாடலில் இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் என்று திருவடியை நாலு சீராலும் ஏனைய உறுப்புகளைக் குறைந்த சீராலும் (குனித்த புருவம், பனித்தசடை என்று ஈரிரண்டு சீராலும், 'கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பு, பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறு' என்று மும்மூன்று சீராலும்) பாடியுள்ளதும், கம்பர், 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற பாடலில் தொடுகழல் கமலமன்னதாள் கண்டார்தாளே கண்டார் என்று திருவடியை அதிகச் சீராலும் (இரண்டு அடிகளின் பகுதியாலும்) வருணித்து இருப்பதும் இந்த உண்மையை வலியுறுத்தும்.

'மேனி' என்பது உடலின் பெரும்பகுதியைக் குறிப்பதால் மூன்றுசீர் பெறுகிறது. புறத்துறுப்புகளில் உடுக்கை மூன்று சீர்களைப் பெற்று ஓர் அடியின் ஒரு பகுதியாகவும், வேல் ஐந்து சீர் பெற்று இரண்டு அடிகளின் பகுதியாகவும் அமைந்துள்ளன. காரணம், வேல் முருகனுடைய அருள் திறத்தை - பகைவர்களை அழித்து, அடியார்களைக் காப்பாற்றுவதை - உணர்த்துவது தான்.

## சொல் தேர்வு

'எய்தின்றால்' என்ற சொல்லுக்கு, உ.வே.சா. 'அடையாநின்றன' என்றும், பிரேமா (1999) பெற்றுச் சிறக்கின்றன என்றும் பொருள் கூறி விளக்கியுள்ளார்கள். பொதுவாக எய்துதல் என்பது மெல்லச் சேருவதைக் குறிக்கும். முருகன் காப்பதால் உலகம் பாதுகாவலான நாட்களை அடைந்தது என்று சொல்லும் போது ஓர் எதிர்மறைப்பொருள் தோன்றும் வாய்ப்புள்ளது. அதற்கேற்பக் "காவாக்கால் உயிர்கள் இன்புறமாட்டா" என்ற சோமசுந்தரனார் விளக்கவுரையும் அமைந்துள்ளது.

உலகம் என்பதற்கு 'அறிவில் (அறிவில்லாத) உலகினை ஒழித்து அறிவுடைய உலகத்தை' என்று சோமசுந்தரனார் குறிப்பிடுவதைச் சிறப்பானதாகக் கொள்ளமுடியாது. ஏனென்றால் கடவுள் அறிவுடைய, அறிவில்லாத எல்லா உயிர்களையும் காப்பார் என்பதே சிறப்பு.

## தொடர்க்கட்டு

இப்பாடல் ஒரு கலவை வாக்கியம். ஈற்றயலடி, 'காப்ப' என்னும்

செயவென் வினையெச்சம் கொண்டுள்ளதால் துணைவாக்கியம் ஆகும். அதற்குக் கொடியோன் என்பதே எழுவாய். எனவே கொடியோனுக்கு முன் உள்ள எல்லாச் சொற்களும் (முதல் நான்கு அடிகளும், ஐந்தாவது அடியின் முதல் சீரும்) அடையாக அமையும்.

ஈற்றடி தான் தலைமை வாக்கியம் (ஏமவைகல் எய்தின்றால் உலகு). அது செயப்படுபொருள் + பயனிலை + எழுவாய் என்ற அமைப்பு உடையது.

'கொடியோன் காப்ப உலகு ஏம வைகல் எய்தின்று' என்ற கலவை வாக்கியம் பிறவினை கொண்டு (காப்ப எய்தின்று) முற்றுப் பெற்றுள்ளது. இறைவனின் திருவடியே அடியார்களுக்கு முக்கியமானது போலவே பாட்டின் திரள் கருத்தை இறுதி இரண்டு அடிகளே (கொடியோன் காப்ப, உலகம் ஏமவைகல் எய்தின்று) விளக்குவதாக அமைந்துள்ளதும் சிறப்பாகச் சுட்டிக் காட்டத் தகுந்தது. அதாவது இறைவன் திருவடி போலப் பாட்டின் இறுதி அடியும் பொருள் வகையால் முக்கியத்துவம் பெற்று சிறப்புப் பெறுகிறது. யாப்பு நோக்கிலும் இந்த இரண்டு அடி ஒரு தொடைக் கட்டாக அமைந்துள்ளது தனிச்சிறப்பை உறுதிப்படுத்துகிறது.

உண்மையில் 'சேவலம் கொடியோன்' என்பது குறிப்பு வினையாக்வும் பெயர். சேவலம் கொடி + ஓன் உண்மையில் ஓன் என்ற ஆண்பால் விகுதி. முன் உள்ள எல்லாப் பெயர்களுக்கும் பொருந்துவதாகக் கூடக் கொள்ளலாம். சேவடியோன், மேனியோன், திகழொளியோன், உடுக்கையோன், வேலோன் இந்த நிலையில் ஆறுபெயர்களும் இணைந்து உம்மைத் தொகையாக அமைந்து 'காப்ப' என்ற வினையை ஏற்பதாகக் கொள்வதில் தவறு இல்லை. வாக்கியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்த பெயர்கள் வரும்பொழுது ஒரு பெயரைத் தக்கவைத்துக் கொண்டு மற்ற பெயர்களைக் கெடுப்பது போல (முருகன் வந்தான், முருகன் படித்தான், முருகன் எழுதினான், என்ற தொடர்களை முருகன் வந்தான்; படித்தான் ; எழுதினான் என்று சொல்லலாம்). இங்கு ஆறு ஒத்த விகுதிகள் அமைந்திருப்பதால் ஐந்து கெடுக்கப்பட்டிருக்கின்றன என்று ஆகும். செய்யுள் என்பதால் இறுதி விகுதியைத் தக்கவைத்துக் கொண்டு ஏனைய விகுதிகள் கெடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், சோமசுந்தரனார் அஃறிணைப் பொருளாகக் கொள்ள (அடி. மேனி). இங்கு உயர்திணைப் பெயர்களின் தொகைகளாகக்

கொடுக்கப்பட்டுள்ளது. இங்குப் புலவர் கடைசியில் உள்ள பெயரான கொடிக்கு, குறிப்பு வினை விகுதியைச் சேர்த்தது அதன் தனிச்சிறப்பைக் காட்டும். அதாவது ஏனைய பெயர்கள் தனிமனித உறுப்புகள் என்ற முறையில் அமைந்துள்ளன என்று ஆகும். கடவுள் உலகு காப்பதை எல்லோரும் அறிவார்கள் என்ற முறையில் செயப்படுபொருள் 'உலகு' கெடுக்கப்பட்டதாகக் கொள்ளலாம். தலைமை வாக்கியத்தில் 'உலகு' (எழுவாய்) + ஏமவைகல் (செயப்படுபொருள்) எய்தின்றால் (பயனிலை) என்ற புதைநிலை அமைப்பு. செயப்படு பொருளும் பயனிலையும் சேர்ந்த பயனிலைத் தொடர் முன் நிறுத்தம் செய்யப்படுவதால் 'உலகு' என்பது ஈற்றுச் சொல்லாகாப் புறவடிவம் கிடைக்கிறது.

திருமுறுகாற்றுப்படையில் நக்கீரர் உலகம் உவப்ப வலனேர்பு... என்று தொடங்கி 'உலகு' என்ற சொல்லை முதலில் அமைக்க இங்கு 'உலகு' ஈற்றுச் சொல்லாக வருகிறது. ஆனாலும் இந்தப் பாடலின் எழுவாய் என்ற முறையில் (உலகு சேவலங்கொடியோன் காப்ப ஏமவைகல் எய்தின்று) தலைமைப் பண்பைப் பெற்று வாசகருக்கு எதிர்பார்ப்பை உண்டாக்கும் வகையில் இறுதியல் அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

துணைவாக்கியத்தில் உள்ள வினை 'காப்ப' செயப்படுபொருள் குன்றா வினையாக இருப்பதால் அதற்கு ஒரு செயப்படுபொருள் இருக்கவேண்டும். 'சேவலம் கொடியோன் உலகைக் காப்ப' என்பது புதைநிலை வாக்கியமாக அமையும். ஒத்த பெயர் செயப்படு பொருளாகவும், எழுவாயாகவும் அமைந்தாலும் செயப்படுபொருளில் உள்ள ஒத்த பெயர் என்ற முறையில் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

### வண்ணக்கோலம்

முதலடி குறிலும் நெடிலும் கலந்து வருவதால் சித்திர வண்ணமாகவும், இரண்டாவது அடி இடையினம் மிகுந்து வருவதால் இயைபு வண்ணமாகவும், அடுத்த இரண்டு அடிகளும் வல்லினம் மிகுந்து வருவதால் வல்லிசை வண்ணமாகவும் வீரத்தின் பிரதிபலிப்பாகவும் அமைகின்றன. ஒவ்வொரு சீரிலும் நெட்டெழுத்து முறைமாறி (முதல் சீரில் முதல் அசைவிலும், இரண்டாவது சீரில் இரண்டாவது அசைவிலும், மூன்றாவது சீரில் முதல் அசைவிலும்) வருகிறது. கடைசி அடியில் நெட்டெழுத்து இரண்டு சீரை ஓர் அலகாகக் கொண்டு முறைமாறி (முதல் இரண்டு சீரில் முதல் அசையிலும், கடைசி

இரண்டு சீரில் இறுதி அசையிலும்) வந்துள்ளது. பாட்டு முழுமையும் ஒழுகிசை வண்ணம் அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

## பொருள் கோலம்

பேராசிரியர் திருக்கோவையார் முதல் பாடலுக்கு எழுதிய உரையை ஒட்டி பண்டிதமணி. கதிரேசன் செட்டியார் (1941) இந்தப் பாடலிலும் ஐந்து நிலமும் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) குறிப்பிடப்பட்டுள்ளதாக விளக்கியுள்ளார். அதாவது பொருள்கள் ஆகுபெயராக அல்லது சுட்டியாக (Index) நிலத்தைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. தாமரை மருத நிலத்தையும், பவழம் நெய்தல் நிலத்தையும், 'குன்று' குறிஞ்சி நிலத்தையும் 'குன்றி' (குண்டுமணி) முல்லை நிலத்தையும் சுட்டுவதாகக் கொண்டுள்ளார். பாலைக்குத் தனிநிலம் கிடையாது. ஆனாலும் முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலை நிலமாகும் என்ற கருத்துக்கேற்பக்'குன்றி' (முல்லை)யும் 'குன்றும்' (குறிஞ்சியும்) ஒரே அடியில் குறிப்பிடப்பட்டிருப்பதால் பாலையும் குறிப்பிடப்பட்டதாகக் கருதலாம் என்பார் அவர். மாறாக, 'நெஞ்சுபக எறிதல்' என்பதைப் பாலை நிலக்கள்வரின் செயலின் குறியீடாகக் கொண்டு பாலைநிலம் குறிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். அதாவது உலகு என்பது ஐந்துவகை நிலத்தால் ஆனது என்பதும் கூடுதல் பொருளாக விளக்கப்பட்டதாகக் கொள்வது ஒருவகையில் 'பொருள் கோலம்' எனலாம்.

## மெய்ப்பாடு

ஒரு கவிதையை வாசிக்கும் பொழுது கவிதை மாந்தர் புலப்படுத்தும் மெய்ப்பாடும், அந்தக் கவிதையை வாசிப்பவர் உணரும் மெய்ப்பாடும் கவனிக்கத் தகுந்தவை.பின்னது வாசகரின் புரிதிறனின் (புரிந்து கொள்ளும் திறமை) ஆழத்தைப் புலப்படுத்தும். இந்தக் கவிதை முருகனின் வருணனையாக அமைந்துள்ளதால் இங்கு வாசகர் மெய்ப்பாடே அமைந்துள்ளதாகத் தோன்றுகிறது.

முதல் இரண்டு அடிகள் முருகனின் உருவ அழகு என்பதால் உவகை மெய்ப்பாட்டையும், அடுத்த இரண்டு அடிகள் 'அணங்கு' (மெய்ப்பாடு. 8) தெய்வம் என்பதே பேராசிரியர் உரை) காரணமாக எழும் அச்ச மெய்ப்பாட்டையும், கடைசி இரண்டு அடிகள் ஆக்கம் (மெய்ப்பாடு. 7) காரணமாக எழுந்த மருட்கை மெய்ப்பாட்டையும் புலப்படுத்துகின்றன.

## முடிவுரை

இது ஒரு கடவுள் வாழ்த்துப் பாடல். தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்கும் போது அகப்புறப்பாடலுக்குப் பிறகுதான் பக்திப் பாடல் தோன்றியதாகக் காணலாம். பக்திப்பாடல் புறப்பாடலின் ஒருவகை நீட்சி என்பார் ராமானுஜன் (1985) அதற்கு ஏற்பவே சங்க காலத்தில் அரசனோடு தொடர்புடைய கோயில் (அரண்மனை), இறை அரசன் போன்ற சொற்கள். இடைக்காலத்தில் கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்படியே அரசனைவாழ்த்தும் பாடல் மரபுகளும், கடவுள் வாழ்த்துப்பாடல் மரபுகளாக மாற்றம் பெற்றன. அரசனை வாழ்த்தும் போது அந்த அரசன் காப்பதால் நாடு வளம் பெற்றது என்று சொல்கிற மரபு உண்டு. அங்கும் ஓர் எதிர்மறைப்பொருள் உண்டு. அந்த அரசனுக்குமுன், மக்கள் நல்ல பாதுகாவலரைப் பெறவில்லை என்ற குறிப்பு உண்டு. இங்கும் 'காப்ப' என்றும். 'ஏமவைகல் எய்தின்று' என்றும் கூறியவை அரசனோடு தொடர்புடையவையே.

அந்த நிலையில் பார்க்கும் போது இந்தப் பாடலும் குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலாக அமைந்திருந்தாலும் அரச வாழ்த்துப் போல அமைந்துள்ளது. அதனால் குறந்தொகை காலத்துக்குப் பிறகு தொகுக்கும் பொழுதே எழுதப்பட்டிருக்க வேண்டும். அதாவது தேவாரம், நாலாயிரத்திவ்யபிரபந்தம் போன்ற முழுபக்தி இலக்கியத்திற்கு முன்னாலும், சங்க இலக்கியத்திற்குப் பின்னாலும் பாடப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் இந்தப் பாடலில் பக்தி இலக்கிய மரபு முழுவதும் காணப்படவில்லை.

## துணைநூல்கள்


1. கதிரேசன் செட்டியார், மு.பண்டிதமணி, 'குறுந்தொகை' உரைநடைக் கோவை, இரண்டாம் பகுதி ப.109-32, சென்னை - 1941.
2. சண்முகம்.செ.வை, தூக்கு அடி விட்டிசை இலக்கியமும் மொழி அமைப்பும் ப.233-43, சென்னை - 1998.
3. சண்முகம்.செ.வை. கவிதைக் கட்டமைப்பு, சிதம்பரம் - 2004
4. சாமிநாதையர்.உ.வே (பதிப்பு) குறுந்தொகை, சென்னை - 1937
5. சோமசுந்தரனார்.பொ.வே. குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை - 1955
6. தொல்காப்பியம் பொருளதிகாரம், பிற்பகுதி பேராசிரியர் உரை. (குறிப்புரையுடன்) பதிப்பு, கு.சுந்தரமூர்த்தி, அண்ணாமலை நகர் - 1985
7. பிரேமா.இரா, குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை-1999
8. Ramanujan .A.K. (Tr), Poems of war and love, Delhi - 1985.

# உள்ளுறையும் இறைச்சியும்

முனைவர்.
**நா. பாலுசாமி,**
மதுரை.

## உள்ளுறை உவமம்

அ) "உள்ளுறை உவமம் ஏனை உவமமெனத்
தள்ளா தாகும் திணைஉணர் வகையே" (46)

ஆ) "உள்ளுறைதெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே" (47)

இ) "உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிக
என உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்" (48)

ஈ) "ஏனை உவமம் தான் உணர் வகைத்தே" (49)

– அகத்திணை இயல் நூற்பாக்கள்

உ) "உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு எனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே" (48)

ஊ) "அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே" (49)

எ) "மங்கல மொழியும், வைஇய மொழியும்,
மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்
கூறியல் மருங்கில் கொள்ளும் என்ப" (50)

– பொருளியல் நூற்பாக்கள்

ஏ) "பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபின் கூறுங் காலைத்
துணிவோடு வரூஉம் துணிவினோர் கொளினே' (23)

ஐ) "உவமப் போலி ஐந்தென மொழிப" (24)

ஒ) "தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப" (25)

– உவம இயல் நூற்பாக்கள்

மேலே காட்டிய (அ) முதல் (ஒ) ஈறாகிய பத்து நூற்பாக்களையும் மனம் கொண்டு, ஆய்ந்து தெளிந்தாலே உள்ளுறை உவமத்தின் பொருளையும் பயனையும் உண்மையாக அறியமுடியும். ஏனை உவமத்தை ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுவதில்லை. ஏனை உவமத்தில் உள்ளுறைக்கு இடமில்லை. ஏனை உவமத்தில் பொருளும் உவமமும் வேறு வேறு நின்று பொருள் வெளிப்படத் தோன்றும்.

இனி, (ஆ) (இ) ஆகிய இரு நூற்பாக்களையும் ஆய்ந்து உள்ளுறை உவமத்தின் நுட்பத்தை அறிவாம். உள்ளுறை உவமமாவது, ஏனை வெளிப்படை உவமம் போலாது உணர்தற்கு அரிதாய், களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளின்கண்ணும், வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்னும் ஐவகை நிலைக்களன் உடைத்தாய், தெய்வம் ஒழிந்த கருப்பொருளைப் பற்றிச் சான்றோர் செய்யுட்கண் வரும் உவம வகை... இஃது ஐவகைப்படும் என்றும் இஃத இன்பமும் துன்பமும் தோன்றச் சொல்லப்படும் என்றும் கூறுப" என்பது ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் உரைவிளக்கம் (ஐங்குறு, வேட்கை, மருதம் 1) இனி, இதனை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம்.

"வாழி ஆதன்; வாழி அவினி;
நெற்பல பொலிக; பொன் பெரிது சிறக்க;
எனவேட் டோளே யாயே! யாமே,
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க;
பாணனும் வாழ்க; எனவேட் டேமே!"

## பொழிப்பு

"காவல் பொருட்டு அரசன் வாழ்க; விருந்தாற்றுதல் பொருட்டு நெற்பல பொலிக ; இரவலர்க்கு ஈதல் பொருட்டுப் பொன் மிக உண்டாகுக ; என யாய் (தலைவி) இல்லறத்திற்கு வேண்டுவனவே விரும்பி ஒழுகியதல்லது பிறிது நினைத்திலள் : அவள் இத்தன்மையளாக, நீ (தலைவன்) ஒழுகிய ஒழுக்கத்தால் நினக்கும், நின் ஒழுக்கத்திற்குத் துணையாய பாணனுக்கும், தீங்குகள் வரும் என்று அஞ்சி, யாணர் ஊரன் வாழ்க' ; பாணனும் வாழ்க, என விரும்பினேம் யாம்" யாம்" என்றது ஆயத்தாரையும் உளப்படுத்தி. (பழைய உரை)

இப்பாடலில் ஊரன் என்றது மருதநிலத் தலைவனை, யாணர் - புதிய வருவாய், காஞ்சிப் பூவையும் சினை மீனையும் ஒருங்கே உடைய ஊரன் என்பதால், புறவொழுக்கம் பூண்டு ஒழுகிய தலைவன் என்பது பெறப்படும். யாங்ஙனம் எனின், குலமகளாகிய (மனைவி) காஞ்சிப் பூவையும், விலை மகளாகிய சினை மீனையும் ஒன்றாக நினைக்கும் இழிசினன் இவன் என்பது பெறப்படும். உள்ளுறைத் தலைவன் பரத்தையர் மாட்டுச் செல்லும் தகாத நடத்தை உடையவன் என்பதை வெளிப்படையாகக் கூறாது. பூவையும் மீனையும் வெளிப்படக் கூறி நாகரிகமாக அவனது களவொழுக்கத்தைப் புலப்படுத்தினாள் தோழி.

நறுமணம் மிக்க காஞ்சிப் பூ – இல்லத்தரசி
நாற்றமெடுக்கும் சினைமீன் – பரத்தை
இரண்டும் அவனது மருதநிலக் கருப்பொருள்கள்

"ஆனால், புலவர் கூற நினைப்பது ஊரன் பரத்தமை உடையவன் என்பதாம். தலைமகனையும் பொதுமகளிரையும் தலைமகன் ஒப்பக்கருதி ஒழுகுகின்றான் என்பதனை உள்ளுறையால் கூறினமையின் வெளிப்படக் கூறிற்றிலள் ; காஞ்சியின் பூவும், மீனின் சினையும் ஒப்ப விளையும் ஊரன் என்பதனால் குலமகளிரையும் பொது மகளிரையும் ஒப்பக் கருதுகின்றான் என உள்ளுறை உவமம் கொள்ளப்படும்" - (ஔவை சு.து)

இனிப் பிறிதோர் எடுத்துக்காட்டும் காண்போம்; நற்றிணைப் பாடல் (4) நெய்தல்; இது, தலைவன் சிறைப்புறத்தானாக, தோழி அலர் அச்சம் தோன்றச் சொல்லி வரைவு கடாயது. பாடியவர் அம்மூவனார். பாடல் வருமாறு ;

"கானலம் சிறுகுடிக் கடல்மேம் பரதவர்
நீல்நிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇத்
தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி
அம்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு
அலரே, அன்னை அறியின் இவண்உறை வாழ்க்கை
அரிய வாகும் நமக்கு எனக்கூறின்
கொண்டும் செல்வர்கொல் தோழி! உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றிக்
கணநிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்
மணல்மடுத்து உரறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண்குருகு வெரூஉம்
இருங்கழிச் சேர்ப்பின்தம் உறைவின் ஊர்க்கே"

## பொழிப்பு

"தோழீ, கடற்கரைச் சோலையில் உள்ள சிறுகுடியிலிருந்து, கடலின் மேல்செல்லும் பரதவர், நீலநிறத்தை உடைய புன்னை மரத்தின் கொழுவிய நிழலில் தங்கி, தண்ணிய பெரிய கடல்பரப்பில் செல்லுதற்கு நல்ல அற்றம் (வேளை) பார்த்து, அவ்விடத்து முறுக்குண்டு கிடந்த வலையைப் பிரித்துப் புலர்த்தாநிற்கும் துறையை உடைய நமது தலைவர்பால் சென்று, நமக்கு உண்டாகிய பழிச்சொல்லை அன்னை (நற்றாய்) அறிந்தால், இனி இங்குத் தங்கிக் களவொழுக்கத்து வாழ்தல் அரிதாகும் என்று கூறினால், உப்பு வாணிகர் வெளிய நல்லுப்பின் விலை கூறிக் கூட்டமாகிய ஆநிரையை எழுப்புகின்ற நெடிய நெறியில் செலுத்தும் பண்டிகள் (வண்டி) மணலில் மடுத்து முழங்கும் ஓசையைக் கேட்டு, வயலில் உள்ள கரிய காலை உடைய, வெளிய நாரைகள் வெருவா நிற்கும் கரிய கழி சூழ்ந்த நெய்தல் நிலத்தின்கண் உள்ள தம் உறைவிடமாகிய ஊருக்கு, உம்மை அழைத்துக் கொண்டும் போவரோ !"

- பின்னத்தூரார்.

## உள்ளுறை (1)

பரதவர் புன்னையின் கீழ் இருந்து, கடலில் செல்லுதற்குப் பதம் (உரிய நேரம்) நோக்கி, அதுகாறும் வலையை உணக்கும் (உலர்த்தும்) துறைவன் என்றது - தலைவன் சிறைப்புறத்திலிருந்து, தலைவியைக் கூடுதற்கு யாரும் இல்லாத நேரம் பார்த்து, அதுகாறும் ஆராய்ந்து கொண்டிருப்பன் என்றதாம். பரதவர் - தலைவன் ; வலையை உணக்குதல் - காத்திருத்தல், பதம் - ஆள் நடமாட்டம் இல்லாத சமயம், மீன்பிடித்தல் - தலைவியைக் கூடுதல். இப்பாடலில் தலைவன் தலைவியை விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்று வரைவு கடாவுகிறாள் தோழி.

## உள்ளுறை (2)

சகடம் (பண்டி) மணலில் மடுத்து முழங்கும் ஓசைக்குக் கழனி நாரை வெருவும் (அஞ்சும்) என்றது - தலைவன் சான்றோரை முன்னிட்டு அருங்கலன் தந்து வரைய வரும் மணமுரசொலி கேட்டு, அலர் எடுக்கும் (பழி கூறும்) ஏதிலாட்டியர் (வேண்டாதவர்) வாய் வெருவி (பேசக்கூசி) ஒடுங்கா நிற்பர் என்றதாம். இவ்வாறு விளக்குவர் உரைகாரராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். இதுகாறும் காட்டிய ஏதுக்களால், உள்ளுறை உவமம் பற்றிய விளக்கம் தெளிவாகும் அன்றோ? இவ்வுள்ளுறை உவமத்தைத் தொல்காப்பியம் உவமப் போலி என்று கூறும், உவமம் சுட்டப்பட்டு, பொருள் சுட்டப்படாமையால் இஃது உவமப் போலியாயிற்று. இவ்வுள்ளுறை உவமம் அகப்பொருளுக்கே உரித்து.

இனி, உள்ளுறை 5 வகைப்படும் என்பர் தொல்காப்பியர். அவை (அ) உடனுறை (ஆ) உவமம் (இ) சுட்டு (ஈ) நகை (உ) சிறப்பு என்பனவாம். நச்சினார்க்கினியர் உள்ளுறை என்பதற்குத் தரும் விளக்கம் வருமாறு; "ஒன்றனை உள்ளுறுத்து, அதனை வெளிப்படாமல் கூறலின் அதனை *உள்ளுறையாம் என்றனர்."*

அ) உடனுறை (உடன் + உறை) இஃது இறைச்சி எனவும்படும். அஃதாவது, "நான்கு நிலத்தும் உளவாய அந்நிலத்து உடனுறையும் கருப்பொருளால் பிறிதொன்று பயப்ப மறைத்துக்கூறும் இறைச்சி. ஒவ்வொரு நிலத்தினும் தோன்றிய கருப்பொருள், அதனை விட்டு, நீங்காமல் தங்கி இருப்பது என்பதனால் கருப்பொருள் உடனுறை எனப்பட்டது

ஆ) உவமம், உள்ளுறை உவமும் ஏனை உவமும் ஆம். இவை அக்கருப் பொருள்களால் கொள்ளப்படுபவை.

இ) சுட்டு : ஒருபொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருள்படுமாறு வருதல்.

"தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவள்செய் தது" (1279)

என்பது குறட்பா, தலைமகள் குறிப்பறிந்து தோழி தலைமகற்கு உணர்த்தியது.

1. தலைமகள் குறிப்புத் தலைவனுடன் செல்வது (உடன்போக்கு)

2. பிரிந்து இருப்பின் தொடி நில்லா

3. தோள் மெலியும்

4. ஆகவே, அடிநோக்கி என்பது (உடன் செல்வது குறிக்கும்)

இக்குறளில் சுட்டப்பட்ட பொருள்கள் தொடி, தோள், அடி. இவற்றால் பெறப்பட்ட உட்பொருள் உடன்போக்கு.

ஈ) நகை - இதனால் பிறிதொரு பொருள் உணர்த்துவது : எண்ணி நகையாடுவதால் ஒரு குறிப்புத் தோன்றல்.

*(பரத்தை கூற்று - தலைவனைப் பற்றி)*

"எம்இல் பெருமொழி கூறித்தம்இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே" (குறுந். 8)

**பொழிப்பு**

தலைவன், எம்வீட்டில் எம்மை வயமாக்குதற்குரிய பெருமொழி களைக் கூறிச்சென்று, தம்முடைய வீட்டில், முன்நின்றார் தம்கையையும் காலையும் தூக்கத் தூக்கும் கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப் போலத் தன்னுடைய மனைவிக்கு அவள் விரும்பியனவெல்லாம் செய்வான். தலைவன் தன் மனைவியை அஞ்சி ஒழுகினான் என்பது கருத்து. இது காதல் பரத்தை கூற்று. இந்நகையுள் உள்ளுறை பொருந்தியமை அறிந்து இன்புறுக.

உ) சிறப்பு ; இதற்குச் சிறந்தது இது எனக் கூறுதலால் பிறிதொரு பொருள் தோன்றுவது.

"என்ஒண்நுதல் நீவுவர் காதலர் மற்றவர்
என்னுவது எவன்கொல் அறியேன் என்னும்" (கலி .4)

தலைவன் தன் பிரிவை உணர்த்தும் வகையில் தலைவியின் ஒளிமிக்க நெற்றியைத் தடவி மகிழ்ச்சி தருவன். அவன் அவ்வாறு செய்தலின் குறிப்பு பிரிவினை உணர்த்துவதேயாம். இதற்கு முன்னைய தாழிசையில்,

"ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர்
என்னுவது எவன்கொல் அறியேன் என்னும்"

என்று பாராட்டு முகத்தான் இழை திருத்துவதினும் நுதல் நீவுவது சிறப்புடைத்தாதலின் சிறப்பு என்னும் உள்ளுறை தோன்றியது.

இனி, இவ் ஐவகை உள்ளறைகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்போம்; ஐந்தும் அகத்திணை மாந்தர்க்குரிய கூற்றுக்களாகச் செய்யுளில் அமையும். இதுவே ஒற்றுமை. இனி வேற்றுமைகள் ;

அ) உடன்உறை : கருப்பொருள்களின் பண்பையும் செய்கையையும் கொண்டு வரும்.

ஆ) உள்ளுறை உவமம் : தெய்வம் ஒழிந்த கருப்பொருள்களின் வழித் தோன்றும்.

இ) சுட்டு ; கூறுவோன் குறிப்பின் வழியே தோன்றும்.

ஈ) நகை : எள்ளுதலை அடிப்படையாகக் கொண்டு வரும். முதல், கரு, உரி வேண்டா.

உ) சிறப்பு : ஒருவரைச் செயற்கையாகப் பாராட்டிக் கூறுதல்.

இனி, அகப் பொருளுக்கே உரிய உள்ளுறை உவமம் போலவே புறப்பாடல்களிலும் உள்ளுறுத்துக் கூறும் உவமைகள் உள. ஆயின், அத்தகு உவமை பிறிது மொழிதல். அல்லது பிறிது நவிற்சி என்ற அணியின்பாற்படும். எடுத்துக்காட்டு ;

"மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்
முற்றி இருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு" (நாலடி, இளமை. பாடல் 9)

கொடிய காற்று அலைப்பின் முற்றிய பழங்கள் விழாமல் நிற்பவும். காய்கள் உதிர்தலும் உண்டு. முற்றிய பழம், முதுமை, காய், இளமை, முதியோர் நீடு வாழவும், இளைஞர் எதிர்பாராது சாவவும் நேர்கிறது. இக்கருத்து வெளிப்படையாக இல்லை. ஆயின், பழம், காய் முதலிய கருப்பொருள்களின் வாயிலாகப் புலப்படுகிறது. இதுவும் உள்ளுறுத்துப் பேசப்படினும், புறப்பாட்டாதலின் உள்ளுறை உவமம் அன்று : பிறிது மொழிதல் அணியாகும். மற்றும் ஓர் எடுத்துக்காட்டு ;

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

மென்மையான மயிலின் தோகைகள் ஏற்றப் பெற்ற வண்டி, பார மிகுதியால் அச்சொடிந்து ஓடாது நிற்கும் ; இது வெளிப்படையான கருத்து இதனால் பெறப்படும் மற்றமொரு கருத்து. எளியர் என்று இகழ்ந்து, பலரொடும் பகை கொள்வான். அவ்எளியர் கூடிய வழி வலி தொலைவான். இப்புறப்பொருள் சார்ந்த அரசியல் கருத்து உள்ளுறுத்துப் பேசப்பட்டுள்ளது. ஆயினும் இஃது உள்ளுறை உவமம் ஆகாது. காரணம், புறப்பாட்டாதலின்.

## இறைச்சி

உள்ளுறை உவமை போன்று இறைச்சியும் அகப்பொருளுள் ஒரு பொருள் கோளாகக் கொள்ளப்பட்டுள்ளது. உள்ளுறை உவமம் தெய்வம் ஒழிந்த பிற கருப்பொருள்களைப் பற்றி வரும் ; இறைச்சி தெய்வமும் மக்களும் ஒழிந்த பிறகருப்பொருள்களின் புறத்தே பிறக்கும். இவ்விரண்டும் அகத்திற்கே உரியவை. இறைச்சி பற்றிய தொல்காப்பிய நூற்பாக்கள் பின்வருமாறு ;

1. "இறைச்சி தானே பொருட்புறத்ததுவே"
2. "இறைச்சி தானே உரிப்புறத்ததுவே"
3. "இறைச்சியில் பிறக்கும் பொருளுமாறுளவே திறத்தியல் மருங்கின் தெரியுமோர்க்கே"
4. "அன்புறு தகுந இறைச்சியுள் சுட்டலும் வன்புறையாகும் வருந்திய பொழுதே" (பொருளியல்)

## பொழிப்பு

"கருப்பொருள்களின் இயைபு, கூறவேண்டிய கருத்துக்கு வேறாய், அடைமொழி வடிவில் வந்து தங்கிப் பயன்படுவது." "இறைச்சியில் பிறக்கும் வேறு உட்கருத்துக்களும் உள்ளன. இஃது ஆராய்வார்க்குப் புலனாம். "பிரிவாற்றாது வருந்திய காலத்து, இது வற்புறுத்தலாய் முடியும். அன்பு கொள்ளத்தக்க கருத்துக்களைக் கருப்பொருள்களின் உட்கருத்தாகக் குறித்தலும் உண்டு" உள்ளுறை உவமத்தில் உவமமும் பொருளும் தோன்றும் ; இறைச்சியில் உவமை தோன்றாது; இறைச்சி கருப்பொருள்களின் புறத்தே தோன்றும். இறைச்சியை உரையாசிரியன்மார் வெவ்வேறு எடுத்துக்காட்டுகளால் விளக்குவர். இளம்பூரணர் தம் உரையில் பின்வரும் குறுந்தொகைப் பாடலைக் காட்டி விளக்குவார்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்.3)

தலைவனோடு செய்த நட்பு மிகச்சிறந்தது என்பது கருத்து. அவன் நட்பு பெரிது ; உயர்ந்தது ; ஆழமுடையது . இப்பாடலில் நாட்டிற்கு அடையாகி வந்த குறிஞ்சிப் பூவும் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க என இளம்பூரணர் கூறியுள்ளார். டாக்டர்.உ.வே.சா. அவர்கள் இக்கருத்தை ஏற்றுத் தம்பதிப்பில் அடிக்குறிப்பாகக் காட்டியுள்ளார். (நாடன் - குறிஞ்சித் தலைவன்)

இனி, நச்சினார்க்கினியர் பிறிதொரு பாடலைக் காட்டி இறைச்சியை விளக்குவார். அப்பாடல் வருமாறு :

"இலங்கும் அருவித்து, இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே – தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை" (கலி. 41)

## நச்சினார்க்கினியர் உரை

நற்றோழி, நீ வாழ்வாயாக! தோழீ! தான் சூளுற்ற சூளுறவினைப் பாதுகாவானாய்ப் பொய்த்தவனுடைய மலையிலிருந்து வீழ்தலுற்று விளங்கும் அருவியை உடைத்து; விளங்கும் அருவியை உடைத்து; மழை பெய்தலால் விளங்கும் அருவியை உடைத்து. "இஃதென்ன வியப்போ ! "

எனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. இதனை, இறைச்சிதானே பொருட்புறத்ததுவே என்பதனால் கொள்க. இவர் மலை, அருவி முதலிய கருப்பொருள்களின் புறத்தே பிறிதொரு பொருளைப் (இறைச்சியை) புலப்படுத்துவதாகக் கொண்டார். இளம்பூரணரோ. அடையாக வந்த கருப்பொருள்களின் அடிப்படையில் இறைச்சி தோன்றியதாகக் கொண்டனர். இருவரும் இறைச்சியை ஒரு பொருள் கோளாகக் கொண்டனர் என்பது தெளிவு. ஆயின், விளக்கத்தில் வேறுபட்டனர் என்க.

*இனித் தஞ்சைப் பாவலரேறு ச.பாலசுந்தரனார் தொல்காப்பியச்* சூத்திரத்தில் வரும் 'பொருட்புறத்ததுவே' என்பதனை,

"இறைச்சி தானே உரிப்புறத் ததுவே"

எனப் பாடவேறுபாடு கொண்டு பின்வருமாறு விளக்குவார். உரிப்புறத்-ததுவே என்றமையான் மாந்தர் ஒழுக்கத்திற்கு வேறாகிய அஃறிணைப் பொருள்களின் பண்பும் நடவடிக்கையும் பற்றி வருவதோர் இயல்பு என்பர். இவரும் இறைச்சியை ஒரு பொருள்கோளாக ஏற்றுக் கொண்டார் என்பது தெளிவு விளக்கம் மட்டில் வேறுபடுகிறது. இறைச்சி என்பதனைக் கருப்பொருளாகவேக் கொள்ளாமல் அவற்றின்தொழிலாகக் கொள்கிறார்.

"பறவை, விலங்கு முதலியவற்றின் செயல்கள் ஒழுக்கம் எனப் படாமையான் உயர்திணை மாந்தர்க்கு உரிய ஒழுக்கமாகிய 'உரி' என்னும் குறியீட்டினைச் சுட்டி, அதற்கு மறுதலையானது என்பது விளங்க அஃறிணைப் பொருள்களின் செயலும் பண்பும் ஆகிய நடக்கையை உரிப்புறத்தது என்றனர் நூலோர்". இவ்விளக்கம் ஏற்புடையதாகத் தோன்றுகிறது. மேலும் அவர் இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் என்று பொருள்கோடல் கூடாது என்பர். ஏனெனில் இறைச்சி என்பது தொழிற்பெயர். பறவை முதலியனப் பொருட்பெயர். இறைச்சி என்பது ஒரு குறியீடு. (இறு+ஐ+சி) இறைச்சி 'ச' பகுதிப்பெருள் விகுதி 'ஐ' சாரியை.

நற்றிணை உரையாசிரியராகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உள்ளுறை உவமம் என்றும், இறைச்சி என்றும் இருவேறு பொருள் கோள்களாகக் கொண்டனர். ஆயின் அவர் தரும் விளக்கம் இவ்விரண்டையும் பிரித்துணருமாறு அமையவில்லை. இரண்டையும் ஒன்றாகவே கூறி மயங்க வைத்துள்ளார். எடுத்துக்காட்டு;

"ஆய்மலர் மழைக்கண் தெண்பனி உறைப்பவும்
வேய்மருள் பணைத்தோள் விறலிழை நெகிழவும்
அம்பல் மூதூர் அரவம் ஆயினும்
குறிவரி இயம்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி
வாரற்க தில்ல தோழி, சாரல்
கானவன் எய்தமுளவுமான் கொழுங்குறை

தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்து கொடு
காந்தளம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்குமலை நாடன் நின்நசையி னானே" — (நற்றிணை 85)

**(இது தலைவன் வரவு உணர்ந்த தோழி தலைவிக்கு உரைத்தது)**

*"கானவன்..................................ஓங்குமலை நாடன்"*

"வேட்டவன் (கானவன்) எய்து கொணர்ந்த முள்ளம்பன்றியின் கொழுவிய தசைத்துண்டத்தைத் தேன்மணம் கமழும் கூந்தலை உடைய கொடிச்சி (குறத்தி) மகிழ்ந்து ஏற்றுக் கொண்டு, காந்தள் மிக்க சிறுகுடியில் உள்ளார் பலர்க்கும் பகுத்துக் கொடா நிற்கும் உயர்ந்த மலை நாட்டை உடைய காதலன்" என்றது.

"கானவன் – தலைவன் (காதலன்) கொடிச்சி – தலைவி
பன்றித்தசை – தலைவன் ஈட்டி வந்த பொருள்
சிறுகுடிப் பகுத்தல் – அப்பொருள் கொண்டு இல்லறம் நடத்தல்"

ஆகவே உவமமும் பொருளும் வேறு நிறுத்தி, ஒத்துப் பொருள் முடித்ததால், இஃது உள்ளுறை உவமம். இஃது ஐயர் அவர்களின் உரை விளக்கம். இனி இதே பாடலில் வரும்,

"குறிவரி இரும்புலி அஞ்சிக் குறுநடைக்
கன்றுநடை வேழம் நின்று காத்து அல்கும்
ஆரிருள் கடுகிய அஞ்சுவரு சிறுநெறி வாரற்க"

மலைநாடன் அஞ்சுவரு சிறுநெறி வாரற்க என்று வினைமுடிவு செய்க. "குறுகிய வரிகளை உடைய கரிய புலிக்கு அச்சமுற்று, விரைந்து செல்லாத நடையை உடைய தன் கன்றைப் பிடியானை (பெண்யானை) ஆண்டு நின்று காத்துத் தங்கா நிற்கும். நீங்குதற்கு அரிய, இருள்மிக்க கண்டார்க்கு அச்சத்தைத் தோற்றுவிக்கின்ற சிறிய நெறி (வழி)". இதில்

பிடியானை - தோழி
புலிக்கு அஞ்சல் - தலைவன் பிரிவால் தலைவிக்கு வரும் ஏதம்
கன்று - தலைவி

அஃதாவது, தலைவன் பிரிவால் தலைவிக்கு வரும் ஏதத்திற்குத் (துன்பம்) தோழி அஞ்சி, "யான் அவளைக் காத்திருக்கின்றேன்" எனக் கூறினாள். இப்பகுதி இறைச்சி என்பர் ஐயர். இஃது உள்ளுறை உவமம் போலத் தோன்றினும், இதனை இறைச்சியாகவே கொள்கிறார். இதனை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் பெரும்புலவர் வெள்ளைவாரணனார் பின்வருமாறு ஓர் அடிக்குறிப்புத் தருகிறார்.

"இறைச்சிப் பொருளைக் குறித்து இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறிய உரை விளக்கத்தினையும், மேற்கோளாகக் காட்டிய பாடல்களின் பொருளமைதியினையும் கூர்ந்து நோக்குங்கால்,

இறைச்சி தான் வெளிப்படக் கூறிய பொருட்கு உபகாரப்படும் அளவில் பொருட்புறத்தாகி வருவதும், அவ்வளவின்றிப் பிறிதும் ஓர் உட்பொருள் கொள்ளும் வண்ணம் உள்ளுறை போன்று வருவதும் என இருவகைப்படும் என்பதும், இவ் இருவகை இறைச்சிகளுள் உட்பொருள் தரும் இறைச்சி, உள்ளுறைஉவமம் போன்று பொருள் தருவதாயினும், அதற்கும் உள்ளுறை உவமத்துக்கும் பெரிதும் வேறுபாடு உண்டென்பதும் ஆராய்ந்துணரும் நல்லறிவு உடையார்க்கு இவற்றிடை அமைந்த வேறுபாடு இனிது புலனாம் என்பதும் நன்குவிளங்கும். (க.வெள்ளைவாரணர் - தொல்காப்பியம்) அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, பக்கம் - 149) இதுகாறும் கூறியவற்றால் உள்ளுறை உவமமும் இறைச்சியும் ஆகிய இரண்டும் தனித்தனிப் பொருள்கோள் வகைகள் என்பதனை இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பாலசுந்தரனார், வெள்ளை வாரணார் ஆகிய நால்வரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

ஆனால், சித்தாந்தக் கலாநிதி ஔவை, சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் உள்ளுறை உவமத்தை உடன்பட்டாலும் இறைச்சி எனத்தனியே ஒரு பொருள்கோள் கொள்ளவில்லை. அவர்தம் மறுப்புப் பின்வருமாறு :

"இறைச்சி தானே பொருட்புறத்ததுவே" என்றொரு நூற்பா தொல்காப்பியத்தில் உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு அதன் உரைகாரர் இறைச்சிப் பொருள் என ஒருவகைப் பொருள்கோளாகக் கண்டுள்ளனர். தலைமகன் பிரிந்து வரவு தாழ்த்தானாக, வேறுபட்ட தலைமகளும் அவள் குறிப்பின் ஒழுகும் தோழியும் அவனை நொந்து கொடுமை கூறுமிடத்து அவன் மலையைப் பார்த்து சூள்பேணான் பொய்த்தான் மலை என்று கூறுகின்றாள். இதன்கண், சூள் பொய்த்தவன் மலையில் மழை பெய்தலும், அருவி வீழ்தலும் இல்லை என்பது பொருட்குப் புறமான கருத்து என்றும், ஆகவே, அஃது இறைச்சி என்றும் கூறினர். எனினும், இந்தப் பொருள் தொல்காப்பியனார் மாறுபட்டுக் கூறும் குறிப்பு மொழிக்கண் அடங்குதலின், இறைச்சி என வேறு கூறல் மிகையாம். மேலும், அவர்க்கு அது கருத்தாயின், உள்ளுறைப் பொருள்கோளாகக் கூறுமிடத்து இதனையும் உடன் கூறியிருப்பர். அவ்வாறு இறைச்சி என விதந்து கூறாமையின் இறைச்சிப்பொருள்கோள் என ஒன்றைத் தொல்காப்பியனார் கூறினார் எனக் கோடல் உண்மையாகத் தோன்றவில்லை.

பிற்கால உரைகாரர்கள் இறைச்சி என வேறுபட நிறுத்திக் குளறுபடி செய்துள்ளனர். (ஔ.சு.து. உரை : ஐங்குறு, மருதம் முதற்பதிப்பு, முன்னுரை, பக் 28,29.

## முடிவாகக் கூறுமிடத்து

1. உள்ளுறை உவமமும் இறைச்சியும் இருவேறு பொருள்கோள்கள்
2. இவை அகத்திணைக்கே உரியவை
3. உள்ளுறை உவமையில் உவமமும் பொருளும் வெளிப்படையாக நிற்கும்.
4. இறைச்சியில் உவமம் வாராது.
5. உள்ளுறை உவமம் பற்றிப் பண்டைய, இன்றைய உரையாசிரியன்மாரிடையே வேறுபட்ட கருத்து இல்லை. அனைவரும் உடன்படுகின்றனர். தொல்காப்பியச் சூத்திரங்களும் எளிதில் பொருள் கொள்ளத்தக்கவை.
6. இறைச்சி பற்றிய பொருள்கோளில் கருத்து வேறுபாடு உண்டு. விளக்கங்களும் வேறுபடுகின்றன.
7. இறைச்சி என்றொரு பொருள்கோள் இல்லை. இது சித்தாந்தக் கலாநிதி. உரைவேந்தர் ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் முடிவு.
8. இறைச்சி பற்றி வரும் சூத்திரங்களில், இறைச்சி, உடனுறை, இறைச்சியில் பிறக்கும் பொருள் இவற்றிற்கு மேலும் விளக்கம் தேவைப்படுகிறது. ஆசிரியர் கருத்து யாதென விளங்குமாறில்லை.
9. இன்றைய ஆராய்ச்சியின்படி அகப்பொருள் பாடல்களில் உள்ளுறைஉவமம், ஏனை உவமம் இறைச்சிப் பொருள்கோள் ஆகியவை ஏற்கத்தக்கவை. ஏனை உவமம் புறத்திற்கே பெரும்பான்மையாக உரியது. அகத்தில் ஒரே வழி வரும். மேலும் ஆராயலாம்.
10. தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலம் வியத்தற்குரியது

# செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி. இராணி ந. இலட்சுமி குமரன் சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச. மாரியப்பமுரளி M.A., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா. சண்முகசுந்தரம் I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச. தசரதராமன் B.A., B.L., | உறுப்பினர் |
| திரு. து. மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா. ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ. சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ. பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி. ராஜாராம் B.A., | உறுப்பினர் |
| முனைவர் அ. செல்வமணி | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு. விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி. வேணுகா | உறுப்பினர் |

RNI Regd. No. 5508/57 January 2015 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month




# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு. விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந. இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி



அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர் / To,

பதிப்பாசிரியர்
பேராசிரியர் **இரா. சதாசிவம்**
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001
அலைபேசி எண். 9487445403


வெளியிடுபவர் : **ச. மாரியப்பமுரளி, M.A.,B.L.** செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 ✆ 0452 - 2343455
அச்சகம் : **ரஹீம் பிரிண்டர்ஸ்,** 67, ஜெய்ஹிந்த்புரம் முதல் தெரு, மதுரை - 11